# யாழ்ப்பாணக் கடைகளில் 'விஞகிரியில்" நச்சுத் திராவகம் கலப்படம்?

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 261
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 15 ஷஃபான் 19 வெள்ளிக்கிழமை [31-10-69]

தீபாவளி
மலிவு விற்பனை!
உங்களுக்கும் உங்கள் குழந்தைச் செல்வங்களுக்கும் தேவையான சகலவிதமான
ஜவுளி வகைகளும்
றெடிமேட் உடுப்புகளும்
மலிவான விலைகளில்
பெற்றுக்கொள்ளலாம்
விக்னேஸ்வரா
ஜவுளி மாளிகை
(பஸ் நிலையத்துக்கு முன்) யாழ்ப்பாணம்.

தீபாவளி
மலிவு விற்பனை!
பலவித டிசைன்களில் வாயில் சாறிகளும், நைலக், டெக்ரோன், மணிப்புரி சாறிகளும், டெர்லின், நொண்ணயன், கொட்டன் சேட்டுகளும், றெடிமேட் உடுப்புகளும் மிகவும் மலிவாகப் பெறலாம்.
கணேசானந்தாஸ்
(முட்டாசுக்கடை சந்தி)
208, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## பரிசோதனை செய்யுமாறு மாஜிஸ்திரேட் உத்தரவு

யாழ்ப்பாணம், வெள்ளி "யாழ்ப்பாணத்திலுள்ள கடைகளில் விற்பனை செய்யப்படும் 'விஞகிரி' போத்தல்களில் மனித உயிரையே பலி எடுக்கும் நச்சுத்திராவகங்கள் கலக்கப்பட்டுள்ளனவாம். யாழ்ப்பாண மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் இதனைக் கண்டு பிடித்துள்ளனர்.

மனித உயிரையே படிப்படியாக பலி எடுக்கும் ஒரு வகையான அசிட்' இதில் கலக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் இவ்வழக்கை நடத்தியச் சுகாதாரப் பரிசோதகர் திரு. சி. முத்துக்குமாரு மாஜிஸ்டிரேட்டின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தார்

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட கொழும்பு வர்த்தக ஸ்தாபனத்துக்கு 75 ரூபா அபராதம் விதித்த யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் ஜனுப் மொகமட் ஜமீல் யாழ்ப்பாணத்திலுள்ள சகல கடைகளிலுமிருக்கும் 'விஞகிரி' போத்தல்களையும் கைப்பற்றி கொழும்பிலுள்ள அரசாங்க வைத்திய பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பிவைக்குமாறும் மாநகர சுகாதாரப் பகுதியினருக்கு உத்தரவிட்டார்.

'அசிட்' கலந்த 'விஞகிரி'யை கடைகளில் விற்பனை செய்வது பாரதூரமான குற்றமாகும் என்றும் மாஜிஸ்டிரேட் எச்சரித்தார். (கா-நி)

## இன்று பண்டாரவன்னியன் நினைவு தினம்

# சகலகட்சிப்பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் விழா

## முல்லைத்தீவு விழாக்கோலம் பூண்டுள்ளது

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம், வெள்ளி முல்லைத்தீவில் இன்று நடைபெறும் பண்டாரவன்னியன் விழாவில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, தமிழரசு கட்சி, தமிழ் காங்கிரஸ், ஈழத்தமிழர் சுயாட்சி கழகம் ஆகிய கட்சிகளின் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள். இவ்விழாவையொட்டி, முல்லைத்தீவு விழாக்கோலம் பூண்டுள்ளது.

புதுக்குடியிருப்பு, செம்மலை, குமுழமுனை, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், மாங்குளம், மற்றும் பகுதிகளிலிருந்து ஏராளமானோர் மன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் திறந்து வைப்பார். பிற்பகல் 4 மணிக்கு முல்லைத்தீவு பட்டண சபை மண்டபத்திலிருந்து பண்டாரவன்னியன் படத்துடன் ஊர்வலம் ஆரம்பமாகும்.

வவனியா எம். பி. திரு [illegible] சிவசிதம்பரம் பண்டாரவன்னியன் கொடியை ஏற்றி வைப்பார். அச்சமயம் வித்தியானந்த கல்லூரி மாணவிகள் கொடிக்கீதம் இசைப்பார்கள் [illegible]

முல்லைத்திவு காரியாதிகாரி திரு. சொ. கணேசநாதன் குத்துவிளக்கேற்றி வைப்பார்.

கழகத் தலைவர் திரு வே சுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்துவார். இதனை தொடர்ந்து திரு ம கு வஸ்தியாம்பிள்ளை தலைமையுரை நிகழ்த்துவார் திரு ஏ வி அருளப்பு உருவப்படத்தை வெளியிடுவார்.

கவிஞர் இ நாகராசா தலைமையில் நடைபெறும் கவி [illegible] கவிஞர்களான முருகசூரியன், அரியான் பொய்கை, திலிபன், ச. தில்லையம்பலம் திருமதி புவனஐயம்பிள்ளை, வி. சண்முகம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

உரையரங்கில் இலங்கை பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி பொ. பூபாலசிங்கம், யாழ். மேயர் திரு எஸ் நாகராசா, யாழ்ப்பாண நகர சபை உறுப்பினர் திரு வி சிவசுப்பிரமணியம், திரு தா சுப்பிரமணிஐயர், திரு கு வி செல்லத்துரை, திரு. ஜி. பி. வின்சன்ட் திரு. வி. ஆனந்தசங்கரி ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

கலைஅரங்கில் முல்லைச் சகோதரிகளின் பரதநாட்டியமும், பாடசாலை மாணவர்களின் நடனமும் பண்டாரவன்னியன் நாடகமும் இடம் பெறும்.

## மேலும் மூவரை அரவம் தீண்டியதாம்

புத்தூர், வெள்ளி பாம்புகடித்து இறந்த ஒரு பெண்ணின் உறவினர்கள் மூவருக்கு அதே வீட்டில் பாம்பு கடித்த சம்பவம் புத்தூர்-நவற்கிரி என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது.

வைத்தி பசுபதி என்ற பெண் பாம்புகடித்து இரண்டுதடவை இறந்ததாக நேற்றைய 'ஈழநாடு' இதழில் செய்தி வெளிவந்திருந்தது தெரிந்ததே. மரணமான பெண்ணின் மூத்த சகோதரனின் மனைவிக்கும், இளைய சகோதரனுக்கும் மற்றும் உறவினரான ஒரு பெண்ணுக்கும் அதேவீட்டில் பாம்பு கடித்துவிட்டதாகக் கூறப்படுகிறது மூவரும் சிகிச்சை பெற்று வருகின்றனராம்.

நேற்று முன்தினம் மரணமான வைத்தி பசுபதியின் ஈமக்கிரியைகள் நடந்தினத்தன்று, இவர்கள் இறந்தவரின் வீட்டில் தங்கியிருந்தார்களாம்

## டேவிட் பிறவுண் டிராக்டர்கள்

### கிளிநொச்சியில் இன்று கிளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி வவனியா, மன்னார் உட்பட வடபகுதி முழுவதற் [illegible] கும் மேற்பட்ட விநியோகஸ்தர்களுக்கு அனுப்பப்படுகின்றன. பிரித்தானிய [illegible]

## கடத்தல் நோக்கத்துடன் படகு வரவில்லையாம்

### பாகிஸ்தான் சுங்கப்பகுதியினர் அறிவிப்பு

கொழும்பு, வியாழன் பருத்தித்துறைக் கடற்கரைக்கு 2மைல் தூரத்தில் வைத்து சென்ற 20ம் திகதி இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பாகிஸ்தான் படகு கள்ளக் கடத்தல் நோக்கத்துடன் புறப்படவில்லையெனபாகிஸ்தான் சுங்கப்பகுதியினர் அறிவித்துள்ளனர்.

பாகிஸ்தான்துறைமுகத்திலிருந்துஇப்படகுபுறப்பட்டதற்கான அதிகாரபூர்வமான பத்திரங்கள் இருப்பதாகவும் சுங்கப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் இதுவரை இதுசம்பந்தமாக எதுவித புகாரையும் தெரிவிக்கவில்லையெனினும் இந்த விவகாரம் சம்பந்தமாக விரிவான விசாரணை நடத்தி வருகிறது.

ரூபா 5 லட்சம் பெறுமதியான சம்பந்தப்பட்ட பாகிஸ்தான் படகிலிருந்து சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான விலைஉயர்ந்த கைக்கடிகாரங்களும், ஆடம்பரப்பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டது தெரிந்ததே.

கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாக படகில் வைத்து கைப்பற்றப்பட்ட 11 பாகிஸ்தானியர்களும் தற்போது கொம்பனித்தெருவிலுள்ள தடுப்புமுகாமில் வைக்கப்பட்டுள்ளனர்: படகு காரைநகர் கடற்படையின் பாதுகாப்பிலுள்ளது.

## கசிப்புவேட்டை; பெண் உட்பட பலருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், வெள்ளி கடந்த வாரம் இரண்டு தினங்கள் பகல் இரவாய் கோப்பாய்ப் பொலிசார் நடத்திய வடிசாராய, கசிப்புவேட்டையில் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த பலர் அகப்பட்டுக்கொண்டனர்.

வடிசாராயம் அதற்கான உபகரணங்களுடன் சந்தேக நபர்களைப் பொலிஸ் சார்ஜன்ட் இராசமுத்தையா தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் கைதுசெய்னர்.

கைதானவர்கள்மீது யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடை [illegible]

## "மாணவர் குழப்பங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்ததே. மரணமான பெண்ணின் மூத்த சகோதர களாம்

# டேவிட் பிறவுண் டிராக்டர்கள்

## கிளிநொச்சியில் இன்று கிளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வவனியா, மன்னார் உட்பட வடபகுதி முழுவதற்கும் டேவிட் பிரவுண் டிராக்டர்கள் விநியோகிக்கும் ஏக விநியோகஸ்தர்களான ரேலன்ட்ஸ் ஸ்தாபனத்தார் கிளிநொச்சிப் பகுதியிலும் மேற்படி டிராக்டர் விற்பனைக்கிளை ஸ்தாபனம் ஒன்றை நவம்பர் முதலாம் திகதி திறந்துவைக்கின்றனர் ரேலன்ட்ஸ் லிமிட்டெட் அதிபர் திரு. ரி. சிறிஇராமநாதன் இக்கிளை ஸ்தாபனத்தைத் திறந்துவைப்பார்.

இங்கிலாந்தின் ஹடேர்ஸ்பீல்ட் பகுதியிலுள்ள டேவிட் பிரவுண் 'டிராக்டர் லிமிட்டெட்டின், உற்பத்திகள் உலகப்புகழ்பெற்றவை, இத்தாபனத்தின் டிராக்டர்கள் பெருமளவு இலங்கையிலுள்ள அவர்களது விநியோகஸ்தர்களான ரேலன்ட்ஸ் (டிராக்டர்கள்) லிமிட்டெட்டினால் இறக்குமதி செய்யப்படுகின்றன

டேவிட் பிரவுண்ஸ் டிராக்டர்களும் அதனோடு பொருத்தப்பட்ட வேறு பல பயிர்செய்கைக்குப் பயன்படுத்தும் கருவிகளும் இன்று உலகின் பல பாகங்களிலுமுள்ள விவசாயிகளால் விரும்பி உபயோகப்படுத்தப்படுகின்றன.

பிரித்தானிய டேவிட்பிரவுன்ஸ் ஸ்தாபனத்தார் உற்பத்திசெய்யும் பலவகைப்பட்ட விவசாய டிராக்டர்களில் 8 வகை டிராக்டர்கள் உலகிலுள்ள அதன் 2,500க்கும் மேற்பட்ட விநியோகஸ்தர்களுக்கு அனுப்பப்படுகின்றன, பிரித்தானிய டிராக்டர் கைத்தொழிலின் மூலம் ஏற்றுமதியாகும் டிராக்டர்களில் பெருந்தொகையாக ஏற்றுமதியாவது டேவிட் பிரவுண்ஸின் டிராக்டர்களேயாகும்.

மேலும் நவீன சாதனங்களைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கைக் காலங்களின் காலநிலைத்தன்மைக்கேற்ப சதுப்பு, வரண்ட நிலங்களில் பயன்படத்தக்கவாறு புதிய கருவிகளை டிராக்டர்களோடு இணைத்து மேற்படி ஸ்தாபனம் உற்பத்திசெய்து விநியோகிக்கிறது, இதனால் விவசாயிகள் எப்போகமும் கஷ்டமின்றி விவசாயத்தில் ஈடுபட இந்த டிராக்டர்கள் பெரிதும் உதவிசெய்வனவாகவுள்ளன

## ஜாவர் சீதாராமன் காலமானார்

சென்னை, அக். 30

பிரபல தமிழ் சினிமா நடிகரும், படத்தயாரிப்பாளரும், கதை வசன கர்த்தாவுமான ஜாவர் சீதாராமன் நேற்று சென்னையில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 49

களின் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள். இவ்விழாவையொட்டி, முல்லைத்தீவு விழாக் கோலம் பூண்டுள்ளது.

புதுக்குடியிருப்பு, செம்மலை, குமுழமுனை, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், மாங்குளம், மற்றும் பகுதிகளிலிருந்து ஏராளமானோர் இங்கு வந்திருக்கின்றனர்.

பண்டாரவன்னியன் நினைவுவிழா இன்று முல்லைத்தீவு திறந்தவெளியரங்கில் முல்லைத்தீவு பட்டணசபைத் தலைவர் திரு. ம. சூ. வஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இன்று மாலை நடைபெறும் உரையரங்கில் வவனியா எம் பி. திரு. தா. சிவசிதம்பரம், ஊர்காவற்றுறை எம். பி. திரு, வ. நவரத்தினம், அனுராதபுரம் எம். பி. திரு. கே டி. ரத்தினநாயக்கா, மட்டக்களப்பு எம். பி. திரு. செ, இராசதுரை, கல்குடா எம். பி. திரு. எஸ். டி. தேவநாயகம் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

காலை 8-30 மணிககு கற்சிலமடுவிலுள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு அஞ்சலி செலுத்தப்படும். பிற்பகல் 3 மணிக்கு பண்டாரவன்னியன் படிப்பகத்தை ஆட்சி

வவனியா எம். பி. திரு ரி [illegible] சிவசிதம்பரம் பண்டாரவன்னியன் கொடியை ஏற்றிவைப்பார். அச்சமயம் வித்தியானந்த கல்லூரி மாணவிகள் கொடிக்கீதம் இசைப்பார்கள் இதனை தொடர்ந்து

தியாம்பிள்ளை தலைமையுரை நிகழ்த்துவார் திரு ஏ வி அருளப்பு உருவப்படத்தை வெளியிடுவார்.

கவிஞர் இ நாகராசா தலைமையில் நடைபெறும் கவியரங்கில் கவிஞர்களான

கலைஅரங்கில் முல்லைச் சகோதரிகளின் பரதநாட்டியமும், பாடசாலை மாணவர்களின் நடனமும் பண்டாரவன்னியன் நாடகமும் இடம் பெறும்.

## "மாணவர் குழப்பங்களுக்கு பெற்றோர்தான் காரணம்"

### — வித்தியாதரிசி

பருத்தித்துறை, வியா.

'மதவெறி, இனவெறி, மொழிவெறி ஆகிய சூழலில் எவ்வித சிறந்த கோட்பாட்டிலமைந்த கல்வியைப் போதித்தாலும் அது அர்த்தமற்றதாகும். குழந்தைகளை அரசியல்வாதம் தவறான பாதையிலிட்டுச் செல்லாது தடுக்கவேண்டிய பொறுப்பு பெற்றாருக்கே உரியது. பெற்றோர் அவ்வித பாரம்பரிய பொறுப்பை உணராமையே இன்று அகில உலகிலும் பரவலாகக் காணப்படும் மாணவர்குழப்பங்களுக்குக் காரணமாகும்'

இவ்வாறு வடபகுதி சித்திர, கைத்தொழில் வித்தியாதரிசி திரு. ஏ. கனகசபை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியப் பேரவை தமக்களித்த வரவேற்பில் கூறினார். திரு. வி. மகாலிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில், ஆசிரியர் அதிருப்தியுடன் சிறந்த கடமையை நாட்டுக்குச் செய்யமுடியாது. கடந்த ஆறு ஆண்டுகளாக ஒரு நெசவு ஆசிரியர் தமது 83 ரூபா மாதச்சம்பளத்தில் வாழவேண்டிய நிலைமையிலிருக்கிறார். இந்நிலையில் அவர் தமது கடமையைச் சரிவரச் செய்யவேண்டும் என வற்புறுத்த முடியாதுள்ளது' என்றார்.

திருவாளர்கள் எஸ். சின்னத்தம்பி, எஸ். தாமோதரம்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

## சுவீப்முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின 270-வது தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
34 C 0105 ரூ. 100,000

இரண்டாவது பரிசு
14 L 0811 ரூ. 40,000

மூன்றாவது பரிசு
26 U 0419 ரூ. 10,000

தலா ரூபா 699 - 90சதம் பரிசுபெறும் டிக்கட் இலக்கங்கள் வருமாறு:

| | |
|---|---|
| 12 Q 0210 | 32 B 0048 |
| 31 A 0376 | 13 J 0020 |
| 34 J 0872 | 17 F 0495 |
| 09 D 0011 | 02 E 0597 |
| 30 Z 0416 | 02 X 0565 |
| 36 N 0017 | 09 D 0003 |
| 06 T 0210 | 25 N 0205 |
| 10 S 0451 | 19 V 0007 |
| 05 L 0685 | 38 B 0275 |
| 28 o 0137 | 25 E 0714 |
| 20 o 0593 | 16 C 0565 |
| 15 J 0902 | 01 K 0481 |
| 25 o 0776 | 31 W 0578 |
| 21 N 0521 | 13 Z 0206 |
| 27 o 0176 | 29 S 0355 |
| 16 G 0040 | 13 R 0532 |
| 33 W 0873 | 36 S 0188 |
| 32 W 0332 | 02 K 0086 |
| 23 J 0871 | 32 o 0863 |
| 34 N 0213 | 09 N 0870 |
| 22 Y 0362 | 13 o 0503 |
| 04 Z 0138 | 13 A 0439 |
| 08 D 0268 | 41 o 0027 |
| 37 X 0669 | 29 K 0685 |
| 13 S 0953 | 35 K 0737 |
| 05 o 0801 | 44 C 0596 |
| 17 H 0574 | 35 R 0673 |
| 34 S 0115 | 39 S 0229 |
| 06 o 0098 | 10 Z 0364 |
| 07 F 0603 | 35 W 0213 |
| 33 J 0188 | 43 B 0778 |
| 15 D 0173 | 28 R 0491 |
| 08 o 0333 | 28 B 0676 |
| 31 L 0190 | 10 V 0446 |
| 31 A 0324 | 41 K 0692 |
| 08 o 0111 | 06 Q 0322 |
| 10 Z 0022 | 07 X 0258 |
| 11 N 0760 | 11 D 0282 |
| 32 P 0267 | 34 G 0809 |
| 41 K 0647 | 24 P 0544 |
| 40 L 0395 | 24 Y 0761 |
| 13 E 0854 | 10 M 0760 |
| 28 T 0335 | 32 Q 0671 |
| 28 H 0622 | 34 S 0925 |
| 42 U 0604 | 10 X 0331 |
| 13 N 0710 | 35 P 0339 |
| 13 F 0669 | 17 X 0963 |
| 22 R 0997 | 13 B 0091 |
| 14 Z 0465 | 40 F 0170 |
| 28 B 0040 | 39 L 0611 |

(இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்)

கடந்த வாரம் இரண்டு தினங்கள் பகல் இரவாய் கோப்பாய்ப் பொலிசார் நடத்திய வடிசாராய, கசிப்புவேட்டையில் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த பலர் அகப்பட்டுக்கொண்டனர்.

உபகரணங்களுடன் சந்தேக நபர்களைப் பொலிஸ் சார்ஜன்ட் இராசமுத்தையா தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் கைதுசெய்னர்.

கைதானவர்கள்மீது யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் பின் 700 ரூபாவரை மாஜிஸ்திரேட் ஜனாப் மொகமட் ஜமீல் அபராதம் விதித்தார்.

கோண்டாவிலைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு 175 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மற்றிருவருக்கு தலா 600 ரூபாவும், 700 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. மேலும் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (கா. நி.)

யாழ். சுங்கக் கொள்ளை

## களனியில் கைதான இருவரும் அடையாளம் காட்டப்பட்டனர்

யாழ்ப்பாணம். வெள்ளி

யாழ்ப்பாணம் சுங்கக்காரியாலயக் கொள்ளை சம்பந்தமாகக் கைதான இரண்டு சந்தேகநபர்களும் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வைத்து அடையாளம் காட்டப்பட்டனர். இந்த அடையாள அணிவகுப்பை தற்காலிக மாஜிஸ்திரேட் திரு. எஸ் கனகரத்தினம் நடத்தினார்.

யாழ்ப்பாணம் பொலிசால் களனியில் வைத்துக் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த ரஞ்சித் சரத் பெரேரா, ஜே. ஆ. தர்மசாதா ஆகிய இருவருமே அடையாளம் காட்டப்பட்டனர்.

கொள்ளை நடக்கும்போது சுங்கக் காரியாலயத்தில் 'காட்' டாகக் கடமையாற்றிய பொன்சேகாவே சந்தேக நபர்கள் இருவரையும் அடையாளம் காட்டினார்,

அடையாளம் காட்டப்பட்ட இருவரையும் அடுத்த மாதம் 11-ம் திகதிவரை தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் ஜனாப் மொகமட் ஜமில் உத்தரவிட்டார்.

இதற்கிடையில் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸ் பகுதி சார்ஜன்ட் திரு. தாமோதரம் இதுசம்பந்தமாகமேலும்இருவரைக் கைது செய்ய நேற்றுக் கொழும்பு சென்றுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (கா. நி)

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீமதி சடையம்மா மடங்களின் தரும பரிபாலன மகாசபையின் பொதுக்கூட்டம் இன்று மாலை 4-30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் சடையம்மா மடத்தில் நடைபெறவிருக்கின்றது.


# கிளிநொச்சி, பரந்தன் விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி

அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தினர்

கிளிநொச்சியில் நாளை (1-11-69) காலை 11-00 மணியளவில் ஓர் மேலதிக கிளை ஸ்தாபனத்தை திறக்கின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றனர்.

இலங்கை ஏகவிநியோகஸ்தர்களான

ரேலன்ஸ் (ரக்ரேஸ்) ஸ்தாபனத்தாரின்

டேவிட் பிறவுண் உழவு யந்திரங்கள், உதிரிப்பாகங்கள் விற்பனை செய்வதுடன் சேவை செய்வதுமே இக்கிளை ஸ்தாபனத்தின் நோக்கமாகும்.



'ஈழநாடு'

# தீபாவளி விருந்து

9-11-69

திறந்தவெளிஅரங்கில்

கலைவிழா

கோட்டை மைதானத்தில்

வண்டிச் சவாரி

விபரங்களுக்கு 'ஈழநாடு' பத்திரிகையைப் பாருங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## தேவை

தேவன்ஸ் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 51, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். 1517

காஷியர் பதவிக்கு ஆள் தேவை. ஓய்வு பெற்றவர்கள் விரும்பத்தக்கது. பயிற்சியாளர்களும் தேவை. கொழும்பு ஸ்ருடியோ. யாழ்ப்பாணம். 1509

## விற்பனைக்கு

காணி:
சாவகச்சேரிச் சந்தையிலிருந்து ஒரு மைலுக்குள் டச்சு றோட்டில் வீடு கட்ட உகந்த 5 பரப்பு நிலம் உடனே விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. வேலுப்பிள்ளை ஆசிரியர், பெரிய அரசடி (அல்லது) இந்துக்கல்லூரி, சாவகச்சேரி. 1503

ஒஸ்ரின் A 40 சமர்செற் கார் E L 3150 அரசாங்க உத்தியோகத்தர் கொழும்பில் பாவித்தது. திறமான நிலைமையில் இருக்கிறது. விபரம்: குணம் சின்னத்தம்பி, ஆலடி கருச், ஆனைக்கோட்டை, குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை. கார் 9 1/1, விசாக்கவீதி, பம்பலப்பிட்டியில் பார்க்கலாம். பூபேந்திரநாதன். 1512

காணி:
வண்ணார்பண்ணை கல்லூரி ஒழுங்கையில் இரண்டு பரப்பு காணி, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. 121/1, கண்டிறோட், யாழ்ப்பாணம். 1516

தளபாடங்கள் விற்பனைக்கு. விபரங்களுக்கு: நம். 36, சிவப்பிரகாசம் வீதி, ஐயனார் கோவிலடி, யாழ்ப்பாணம். 1515

எமது சொந்தப் பாவிப்பில் உள்ள 3 சிறீ 3000க்கு மேற்பட்ட நம்பருடைய மொரிஸ்மைனர் கார். உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: No. 17, சின்னக்கடை வீதி, யாழ்ப்பாணம். 1514

---

சுன்னாகம் பட்டணசபை
# சோலைவரி

1969-ம் ஆண்டு 2-ம் கந்தாயத்துக்குரிய சோலைவரியை, வரிஅறவிடுபவரிடம் அல்லது பட்டணசபை அலுவலகத்தில் 5-11-69-ம் திகதி அல்லது அதற்கு முன் செலுத்தத் தவறின் கூடுதலாக 10 வீதம் (பத்து வீதம்) விருந்துப்பணமும் வரிப் பணத்துடன் சேர்த்து அறவிடப்படும் என்பதை சுன்னாகம் பட்டணசபை வரியிறுப்போருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டணசபை,
சுன்னாகம்.
பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்,
26-10-69. 1808

# நெல்லியடி வென்றது

பருத்தித்துறை, வியா.
யாழ். பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடந்துவரும் சுற்றுப்போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மூன்றும் பிரிவுக் கோஷ்டியும், வதிரி திரு. இருதயக் கோஷ்டியும் மோதிக் கொண்டதில். நெல்லியடிக் கோஷ்டி 3 — 0 கோல்களால் வெற்றியீட்டியது.

திரு எம். ஆர் அப்துல் முனாப் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

......

# உதைபந்தாட்டம்

அல்லைப்பிட்டி, புதன்
தீவுப்பகுதி விளையாட்டுச் சங்கம் வருடந்தோறும் நடாத்தும் உதைபந்தாட்டப்போட்டி அடுத்தமாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கின்றது இப்போட்டியில் தீவுப்பகுதியைச் சேர்ந்த பல கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

## விற்பனைக்கு

காணி
ஒவ்வொன்றும் இரண்டு பரப்பாகவுள்ள, கட்டடங்களுக்கான காணித்துண்டுகள் நல்லூர் கிழக்கு வைமன் வீதியில் விற்பனைக்குண்டு. நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கருகாமையில், குடியிருப்புப் பகுதியில் வீதிக்கு முன்னால் இக் காணிகள் உண்டு. ஒரு பரப்பு ரூபா 16,000/- விண்ணப்பிக்கவும்: தர்மலிங்கம், 41, கண்டி வீதி சுண்டிக்குளி அல்லது புரக்டர் சுப்பிரமணியம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 1518

---

சிநேகபூர்வமான உதைபந்தாட்டம்
# றெக்கிளமேஷன் கோஷ்டி
## பொலிஸ் கோஷ்டியை வென்றது

யாழ்ப்பாணம், வெள்ளி
விளையாட்டமைச்சினால் வடமாகாண காரியாதிகாரி பிரிவுகளிடையே நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில். வடமாகாணச் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட 'றெக்கிளமேஷன்' சனசமூக நிலையத்துக்கும், யாழ். பொலிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 'றெக்கிளமேசன்' கோஷ்டி வெற்றி பெற்றது.

யாழ். கோட்டை மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியின் ஆரம்பம் மிகவும் ரசிப்பாகக் காணப்பட்டது. இரு கோஷ்டியினரும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் விளையாடினர். இடைவேளையின் போது 'றெக்கிளமேஷன' கோஷ்டி இரு கோல்களைப் போட்டது. இவற்றை இக் கோஷ்டியின் முன்னணி வீரரான போல் போட்டார். பொலிஸ் கோஷ்டி ஒரு கோலைப் போட்டிருந்தது. இதனை அக் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் அன்வர் அடித்தார்.

இடைவேளையின் பின் 'றெக்கிளமேஷன' கோஷ்டியின் முன்னணி வீரர் பல தடவைகள் கோல்கள்போட முயன்ற போது, பொலிஸ் கோஷ்டியின் பின்னணி வீரர்களின் சாதுரியமான விளையாட்டினால் தடுக்கப்பட்டது. இருந்தும், 'றெக்கிளமேஷன்' கோஷ்டியின் பின்னணி வீரர் கிறேஷியனின் வேகமான அடியினால் இக் கோஷ்டி மூன்றாவது கோலைப் பெற்றது.

ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கும் போது பொலிஸ் கோஷ்டியின் வலதுகரை வீரர் முணசிங்கா மின்னல் வேகத்தில் இரண்டாவது கோலைப் போட்டார்.

'றெக்கிளமேஷன்' கோஷ்டி 3—2 கோல்களால் ஆட்ட இறுதியில் பொலிஸ் கோஷ்டியைத் தோற்கடித்தது.

இப் போட்டிக்கு திரு ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே. நி)

# யாழ். இந்துவுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், வியா.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2-ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு எதிராக ஆடிய உதைபந்தாட்டத்தில் வெற்றியீட்டியது. மிகத்துரிதமாகவும் உற்சாகமாகவும் ஆடிய இந்துக் கல்லூரி இளைஞர்கள் மத்திய கல்லூரியை 6 — 0 கோல்களினால் வெற்றியீட்டினர். இவ்வாட்டத்தில் கெங்காதரன்-3, இராகுவன்-1, தயாபரன்-1, வசந்தன்-1 ஆகியோர் முறையே கோல்களைப் பெற்றுக் கொடுத்தனர். திரு. ஜத்துகுலசிங்கி மத்தியஸ்தம் வகித்தார்.

பேற்படி கல்லூரிகள் இரண்டுக்குமிடையே நடைபெற்ற 3-ம் பிரிவு ஆட்டம் யாழ். மத்திய கல்லூரிக்கு 1-0 கோல்களினால் வெற்றியுடன் முடிவடைந்தது. திரு ஞானப்பிரகாசம் மத்தியஸ்தம் வகித்தார். (கா. நி)

# கதீஜா மகளிர் கல்லூரி சாதனை

யாழ்ப்பாணம், வெள்ளி
வடமாநிலக் கல்வித் திணைக்களம் நடத்திய ஆறும் ஏழாம் வகுப்புத் தேர்வுகளில் யாழ்ப்பாணம் முஸ்லிம் கதீஜா மகளிர் கல்லூரி மாணவிகள் அதிக புள்ளிகள் பெற்றுத் திறமையாகச் சித்தியடைந்துள்ளனர் குறிப்பாக முக்கிய பாடங்களான தமிழ்மொழி, ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமாகச் சித்தியடைந்துள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன்
# ச.ச நிலைய நிர்வாகிகள்


புன்னாலைக்கட்டுவன், வியா
அண்மையில் புன்னாலைக்கட்டுவன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி. செல்லத்துரை, உபதலைவர்: இ. விக்கினராசா, செயலாளர்: க.செ.பா. ஐயர், பொருளாளர்: ஆ. துரைராசா.

பதின்மூன்றுபேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

# நாளை மிருதங்க அரங்கேற்றம்



செல்வன் தர்மலிங்கம் ரஞ்சித்தின் மிருதங்க அரங்கேற்ற விழா நாளை மாலை 6 மணிக்கு யாழ். நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

வடமாநில கல்வி அதிபதி திரு. சி. தணிகாசலம் இந்த வைபவத்திற்குத் தலைமைவகிக்கிறார்.

மிருதங்க வித்துவான் திரு. ஏ எஸ், இராமநாதன் அவர்களிடம் ஆரம்பத்தில் மிருதங்கம் கற்ற செல்வன் ரஞ்சித் தற்பொழுது திரு. ரி. பாக்கியநாதனை ஆசிரியராகக் கொண்டு மிருதங்கம் கற்றுவருகிறார். சென்ற். ஜோன்ஸ் கல்லூரிப் பழைய மாணவரான இவர் இப்போது யாழ். இந்துக்கல்லூரியில் பயின்றுவருகிறார்.

இவர் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தில் முன்பு கல்விக்கூடக் கட்டடப் பரிசோதகராகக் கடமை பார்த்தவரும், தற்சமயம் மட்டக்களப்புக் கல்வித் திணைக்களத்தில் கல்விக்கூடக் கட்டடப் பரிசோதகராகக் கடமையாற்றுபவருமான திரு. தர்மலிங்கம், திருமதி தர்மலிங்கம் ஆகியோரின் மூத்த மகனாவார்.

சங்கீதபூஷணம் திரு பொன். சுந்தரலிங்கத்தின் கச்சேரிக்கு, செல்வன் ரஞ்சித் மிருதங்கம் வாசிக்கிறார்.

# இன்றைய பலன்

ஐப்பசிமாதம் 15-ந் திகதி (31 - 10 - 69)

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்**- இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும் காதல் கலைதாக்கும். கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். பாலுணர்ச்சி மேலிடும்.

**ரிஷிபம்**- உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும். பணவிவகாரத்தின்மூலம் பகை தோன்றலாம் தொழில் துறையில் அதிகம் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்**- சிறிய விபத்திற்கு கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும். மற்றவர்களின் குறுக்கு வழித்தலையீடும் இடம்பெறும். பொறுமையைப்பேணவும்.

**கடகம்**- பேச்சுவன்மையினால் பெரும் புகழ் கிடைக்கும். பெரிய இடத்துச் சாவகாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும். வரவிலும் உயர்வுகாணும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கலாம்.

**சிம்மம்**- குடும்பத்தில் சிறுபூசல் தலைதூக்கும். பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும். ஆத்திர உணர்ச்சியினால் மோதல்கள் ஏற்படும். அமைதியுடன் இருக்கவும்.

**கன்னி**- வாகனச்சாரதிகள் பொதுமக்களின் நன்மதிப்பைப்பெறுவர். தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும், மேலிடத்துச் சிபார்சும் கிடைக்கும்.

**துலாம்**- நல்லவர்களின் அறிமுகம் இன்று கிடைக்கும். புதிய முயற்சிகள் கைகூடும். பேச்சுவன்மையின் மூலம் பொதுத்துறையில் புகழ் அடைவீர்கள்.

**விருச்சிகம்**- தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்திற்கும் இடம் ஏற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும். கலைக்கோயிலாகமாறும்.

**தனுசு**- குடும்பம் இன்று கலைக்கோயிலாகமாறும். இசைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும். பிள்ளைகளினால் பெருமைக்கும் இடம் உண்டு.

**மகரம்**- விஷப்பரீட்சையின்மூலம் விபரீதங்கள் விளையும். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம். இன்று சும்மா இருப்பதே சுகம்.

**கும்பம்**- நினைத்தது நடக்கும் பந்துசனங்களின் கொண்டாட்டம் உண்டு. பிதாவழிமூலம் எதிர்பாராத பொருள்வரவு கிடைக்கலாம். பெரியோர்கள் ஆதரவும் கிடைக்கும்.

**மீனம்**- வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கு இடமுண்டு ... செலவினங்கள்

---

# சைவமாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி
கைதடி இந்து வாலிபர் சங்கத்தால் வருடாவருடம் நடாத்தப்பட்டுவரும் ஆறாவது சைவமாநாடு அடுத்த மாதம் 14, 15, 16-ந் திகதிகளில் நடைபெற இருக்கிறது.


**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜி — பானுமதி
நடித்த
**ரங்கூன் ராதா**
(புதிய கொப்பி)

வல்வெட்டித்துறை
**றஞ்சனா தியேட்டர்**
தினசரி 2-30 6-30, 9-30
சுந்தரராஜன் - பத்மினி
பேபிராணி
நடித்த
**குழந்தைக்காக**

**ஸ்ரீ காலிங்கா**
இணுவில்
Daily 4-45, 7, 10-00 p m
CHAMBER OF HORRORS
(color)

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7-00&9-45pm
Poya Prepoya 10-30 a. m
THE FURTHER PERILS OF LAURЯL AND HARDI

**REGAL** JAFFNA
Daily 4 Shows
Anthony Quinn,
Claudia Cardinale
in
LOST COMMAND
(Adults)


# மாமுனையில் கலவரம்

மட்டுவில், வியா.
வல்வெட்டித்துறைப் பொலிஸ் பகுதியில் நடைபெற்ற திருட்டையொட்டி வல்வெட்டித்துறைப் பொலிசார் செம்பியன்பற்றை அடுத்துள்ள மாமுனைக் கிராமத்தில் சில வலைகளைக் கைப்பற்றினர் இதையடுத்து. மாமுனைக் கிராமத்தில் உள்ள கிராமவாசிகளிடையே ஏற்பட்ட கலவரத்தில் பலர் காயங்களுக்குள்ளானார்கள்.

இது பற்றி செம்பியன்பற்று கிராமசேவையாளர் திரு. எஸ். சின்னத்தம்பி, பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி திரு. எஸ் அருணாசலத்திற்குத் தெரிவித்ததைத்தொடர்ந்து பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி திரு. எஸ். அருணாசலம் பளை பொலிஸ் நிலைய அதிபர் திரு. எஸ். ஜே. மிஸ்கின் ஆகியோர் ஸ்தலத்திற்கு விரைந்து அங்கு நிலவிய கலவரத்தை அடக்கி சமாதானத்தை நிலைநாட்டினர்.

அதையடுத்து காரியாதிகாரி திரு. அருணாசலம் தலைமையில் அங்கு ஒரு கூட்டம் கூட்டப்பட்டு. இருதரப்பினரையும் ஒற்றுமைப்படுத்தி ஒரு சமாதான சபையையும் உருவாக்கினர்.


புதிதாக
வரவழைக்கப்பட்ட
சிறுவர்களின்
நைலோன் ரீ. சேட்டுகள்
ம. வி. 24-50
ரை & டை புஸ்சேட்டுகள்
ம. வி. 18-50
**டயரூம்ஸ்**
54-60 மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

**ராஜா** — யாழ்ப்பாணம்
தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-45 மணி
போயா முன்தினம், போயா தினம், விடுமுறை தினம்
காலை 10-30 மணி
* ஜெய்சங்கர் * விஜயகுமாரி
முத்துராமன், வாணிஸ்ரீ, எஸ். ஆர். ஜானகி
நாகேஷ் - பாலையா - எஸ். என். லட்சுமி
நடித்த
**பூச்சரம்மா**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, கே. ஆர். விஜயா, பத்மினி, நாகேஷ்
நடித்த
**இரு மலர்கள்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

னக்கடை வீதி, யாழ்ப்பாணம். 1514

ணப்பிக்கவும்: தர்மலிங்கம், 41, கண்டி வீதி சுண்டிக்குளி அல்லது புரக்டர் சுப்பிரமணியம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 1518

யாழ். மத்திய கல்லூரிக்கு 1-0 கோல்களினால் வெற்றியுடன் முடிவடைந்தது. திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ் தம் வகித்தார்.


பா. ஐயர், பொருளாளர்: ஆ. துரைராசா. பதின்மூன்றுபேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு (கா. நி) செய்யப்பட்டது.

பெருமைக்கும் இடம் உண்டு.

**மகரம்**- விஷப்பரீட்சை ன்மூலம் விபரீதங்கள் விளையும். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம். இன்று சும்மா இருப்பதே சுகம்.

**கும்பம்**- நினைத்தது நடக்கும் பந்துசனங்களின் கொண்டாட்டம் உண்டு. பிதாவழிமூலம் எதிர்பாராத பொருள்வரவு கிடைக்கலாம். பெரியோர்கள் ஆதரவும் கிடைக்கும்.

**மீனம்**- வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கு இடமுண்டு புதியமுயற்சிகள் இன்றுகைகூடும், செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.



## நிகரற்ற கவர்ச்சிப் பெண்ணுகை நிச்சய வழி—
## கோயா பெர்பியூமும் கோலோனும்




உங்கள் பெண்மையின் மென்மை வனப்பை மேலும் வனப்பாக்க, நம்பத்தகுந்த நறுமண வாசனைத் திரவியங்கள் கோயா பெர்பியூமும் கோலோனும்.

உலகின் உன்னத வாசனைத் தயாரிப்பாளர்கள் தனித்தனிச் சிறப்புடன் சீர் செய்தளிக்கும் எழு மனங்கவர் நறுமணங்கள் கொண்ட கோயா பெர்பியூமும் கோலோனும், நாகரிக மாநகர் தோறும் வசீகர வனிதையரால் விரும்பித் தேர்ந்தெடுத்துப் பாவிக்கப்படுவன.

நாள் முழுதும் நீடித்த நறுமணந் தரும் பரிமளமான கோயா பெர்பியூமும் கோலோனும், நாள்தோறும் பாவியுங்கள்.

பிளாக் ரோஸ், கார்டினியா, என்டைஸ், நம்பர் 5,
லவ் அஃபயர், டைம்லஸ், வைல்ட் சில்க்.

லண்டன், பரிஸ், நியூயார்க், மாநகரங்களில் மகிமை பெற்றது கோயா.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வெள்ளி 31—10—69**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 பண்ணிசைத்தமிழ், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 41 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாணவர்மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடு பாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலினிசை, 7-35 வானொலி குறுக்கெழுத்துப் போட்டி, 8-00, செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-20 பேச்சு 9-30 நாடகம், 10-15 நேயர்கேட்டவை 10-30 செய்திச்சுருக்கம்.

## 1978ல் வேலையற்றோர் தொகை 1305000

கோட்டை, வியாழன் 1978-ம் ஆண்டில் நாட்டில் வேலையற்றோர் தொகை 1,305,000 ஆகும். திட்ட பொருளாதார அமைச்சு சமீபத்தில் நடத்திய மனித சக்தி ஆய்வில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் வருடாவருடம் வேலையற்றோர் தொகை 10 வீதம் கூடிக்கொண்டு போவதாகவும், இன்றுள்ள தொழில் புரியத்தக்கவர்கள் தொகை ஏறக்குறைய அரைக் கோடியாகவுள்ளது எனவும் இதில் 402,000 பேர் வேலையில்லாதிருக்கிறார்கள் என்பதும் மேற்படி ஆய்வின் மூலம் தெரிய வருகிறது. ...... ல

பருத்தித்துறை. வியா. தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி விஞ்ஞான ஆசிரியர் திரு எஸ். தம்பிராசா அடுத்தமாத ஆரம்பத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கடமையேற்கவிருக்கிறார்.


'ராதா"

# சக்தி பூஜா அகர் பத்தி

★ ஆலயங்கள்
★ திருமண வைபவங்கள்
★ இன்ப நிகழ்ச்சிகளிலும்

உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்வது

## ராதா சக்தி பூஜா அகர் பத்திகளே!

ஏக விநியோகஸ்தர்கள்:

## எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.

160, செட்டியார்தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068.



# வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி, கே. ஆர். விஜயா, பத்மினி, நாகேஷ் நடித்த

# இரு மலர்கள்

(புதிய கொப்பி)

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி நிர்மலா சௌகார் ஜானகி நடித்த

# லக்ஷ்மி கல்யாணம்

வெற்றிமுரசு கொட்டும் 2-வது வாரம்

இங்ஸ்லி (கொழும்பு)

பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் [யாழ். நகர்]

தினசரி 2-30, 6-30, 9-30, போயா, பிரிபோயா 4 காட்சிகள்



★ ரவிச்சந்திரன்,
★ பத்மினி,
★ நாகேஷ்,
★ குமாரிசச்சு,

மற்றும் பலர் நடித்த

# எங்களுக்கும் காலம்வரும்

கதைவசனம்: பாசுமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
பாடல்கள்: கண்ணதாசன்-வாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனுன் நெருக்கடி: மத்தியஸ்தம் செய்ய எகிப்து இணக்கம்

## கொமாண்டோ தலைவர் கெய்ரோ வருகிறுர்

கெய்ரோ. அக் 30 லெபனுனில் அரசுப் படைகளுக்கும், பாலஸ்தீனக் கொமாண்டோக் களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள மோதலில் சமரசம் செய்துவைக்க ஐக்கிய அரபுக் குடியரசு முறைப்படி இணக்கம் தெரிவித்திருக்கிறது.

சமரசம் செய்துவைக்கும் முயற்சியின் முதல் கட்டமகப் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் கெய்ரோவுக்கு அழைக்கப்பட்டிருக்கிறுர்.

கெய்ரோவில் ஐக்கிய அரபுத் தலைவர்களுடன் பேசுவதற்காக வந்திருக்கும் லெபனுன் இராணுவத் தளபதி ஜெனரல் புஸ்தானி தலைமையிலான தூதுகோஷ்டியினர் சமரசத்துக்கு வழிகோலக்கூடிய நல்ல அடிப்படையுள்ள ஆலோசனைகளை தெரிவித்திருப்பதாக அதிபர் நாஸரின் விசேஷ பிரதிநிதியான டாக்டர் ஹேொலி கூறியிருக்கிறுர்.

பாலஸ்தீனக் கொமாண்டோகள் தமது நாட்டின் பாதுகாப்புக்கும், ஆதிபத்தியத்துக்கும் பங்கமேற்படாதவகையில் சுதந்திரமாக நடமாடுவதற்கு உரிமை வழங்க லெபனுன் இணங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் பாலஸ்தீனக் கொமாண்டோக்களுக்கும், லெபனுன் இராணுவத்துக்குமிடையில் ஏற்பட்ட இருபத்துநான்கு மணி நேரப் போர்நிறுத்தத்துக்கு விரோதமாக லெபனுன் நடந்துகொண்டதாக கொமாண்டோக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

செஞ்சிலுவைச் சங்க அம்புலன்ஸ் வண்டி ஒன்றின் மீது சுட்டதின் மூலம் லெபனுன் படையினர் போர் ஒய்வு ஏற்பாட்டை மீறியிருக்கிறுர்கள் என்று கொமாண்டோக்கள் குற்றஞ்சாட்டினுர்கள். ஆனல் அப்படியான போர் ஓய்வு ஏற்படவில்லை என்றும் போர் ஒய்வை மீறவில்லை என்றும் லெபனுன் தரப்பினர் அறிவித்தனர்.

## காங்கிரஸ்தலைமைப் பீடம்மீது நான்கு எம். பி.க்கள் தாக்குதல்

### நிஜலிங்கப்பா புதுடில்லி திரும்பிஞர்

புதுடில்லி, அக்-30 பாரத மக்கள் மத்தியில் பொருளாதார வளர்ச்சியின் அவசியத்தை உணர்த்துவதின்மூலம் வகுப்புவாதப் போக்கை கட்டுப்படுத்த காங்கிரஸ் கட்சி முன்வர வேண்டும் என்று இந்திய ஆட்சிமன்ற காங்கிரஸ்உறுப்பினர்கள் நால்வர் கட்சித் தலைவர் திரு நிஜலிங்கப்பாவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் வற்புறுத்தியிருக்கிறுர்கள்.

பொருளாதார வளர்ச்சி பற்றி மக்களுக்கு அறிவுறுத்துவதற்கு காங்கிரஸ் கட்சி முயற்சி எடுக்கவில்லையென்றும் கட்சித் தலைவர்களும் இது விஷயத்தில் அக்கறை காட்டவில்லையென்றும்

...லிருந்து இப்பொழுது புதுடில்லி திரும்பியிருக்கிறுர்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடுவதுபற்றி அவர் ஒன்றும் கூற மறுத்துவிட்டார். பிரதம மந்திரியை சந்தித்துப் பேசும் விஷயத்தில் தாம் முதல் முயற்சி செய்யப் போவதில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் காரியக்கமிட்டி நாளை மறுதினம் கூடவிருக்கின்றது. அதற்குள் தலைவர்களுக்கிடையில் சமரசம்ஏற்படுமா அல்லது காரியக் கமிட்டிக் கூட்டத்தில் பலத்த மோதல் ஏற்படுமா என்பது ஒன்றும் தெரியவில்லை. திருமதி காந்தியின் குழுவினர் எதற்கும் தயாராய் இருப்பதாகவும் எந்த நிலை...

தாம் ஏற்றுக்கொள்ள தயாராய் இருப்பதாக நிஜலிங்கப்பா அண்மையில் கூறியது. சின்டிகேட் சார்பில் பலவீனம் ஏற்பட்டிருப்பதையே காட்டுவதாக சில அவதானிகள் கருதுகிறுர்கள் சின்டிகேட்டுக்குள்ளும் வடக்கு தெற்கு பிரச்னை ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

லிபியாவில்

### பிரிட்டனுக்கு மூட்டை கட்ட உத்தரவு

திரிபோலி, அக்.30 லிபியாவிலுள்ள ராணுவத் தளங்களையெல்லாம்...

நம்பூதிரிபாட் மீண்டும் முயற்சி

திருவனந்தபுரம், அக். 29 கேரளத்தில் நம்பூதிரிபாட்டின் தலைமையில் மீண்டும் மந்திரிசபையை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

0 0 0

இரத்தத்தோடு கலந்தவர்

சென்னை அக்.30 தமிழ் மக்களின் இரத்தத்தோடு அண்ணு கலந்து விட்டார். என்று கோவையில் நடந்த அண்ணு சிலை திறப்பு விழாவில் கருணுநிதி குறிப்பிட்டுள்ளார்.

0 0

சோவின் 1000-வது நாடகம்

சென்னை, அக்.30 நடிகர் சோவின் நாடகங்களை 1000-வது முறையாக விவேகா பைன் ஆர்ட்ஸ் குழுவினர் நடித்தனர். சோவைப்பாராட்டி நடிகர் எம். ஜி இராமச்சந்திரன் பேசினுர்.

---

### 'பஸ் சேவையை சீராக்குக'

ப.ச.தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன் 'காங்கேசன்துறை-யாழ்ப்பாணம் வீதியில் பஸ்சேவை மிகவும் மோசமாயிருக்கின்றது. இந் நிலைமையை டிசம்பர் 1ம் தேதிக்கு இடையில் மாற்றம் செய்து பஸ் பிரயாணிகளுக்கு ஆறுதல் அளிக்கும்படி தேசிய சேவை மந்திரியைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம்ஒன்று சுன்னுகம்பட்டினசபை மாதாந்தக் கூட்டத்தில்நிறைவேறியது

இத் தீர்மானத்தின் பிரதிகளை காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவருக்கும் மயிலிட்டி, ஏழாலை, தெல்லிப்பளை, மல்லாகம், உடுவில் ஆகிய ஐந்து கிராம சபைத் தலைவர்களுக்கும் அனுப்பி அவர்களது ஒத்துழைப்பையும் பெறவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பட்டினசபைத்தலைவர் திரு.பொ நாகலிங்கம் பிரேரணையை சமர்ப்பிக்க திரு. இ. இராசதுரை (உப தலைவர்) ஆமோதித்தார்.

### கோரிக்கை

ஸ்பெயின்

### பிராங்கோ மந்திரிசபை பெரிய மாற்றம்

மட்ரிட், அக். 30 ஸ்பெயின் அதிபர் ஜெனரல் பிரான்கோ தமது மந்திரி சபையில் பெரும் மாற்றம் செய்து 14 மந்திரிகளைப் புதிகாக நியமித்திருக்கிறுர். மந்திரி சபையில் உத்வேகம் மிக்க இளைஞர்களை அவர் சேர்த்திருப்பதாகக் கூறப் படுகின்றது ஜிப்ரால்டரை ஸ்பெயினுடன் சேர்க்க வேண்டுமென்று தீவிரமாக வற்புறுத்திவந்த வெளிநாட்டு மந்திரியை அவர் மாற்றியிருப்பது பெரிய விஷயமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஜெனரல் பிராங்கோ பதவிக்கு வந்த 30 ஆண்டுகளில் இவ்வாறு பெரிய அளவில் மந்திரிசபையை மாற்றி அமைத்திருப்பது இதுவே முதல்தடவையாகும்.

ரொடீஷியாவில்

## மகாராணிக்குப் பதில் ஜனதிபதி இருப்பார்

ஸாலிஸ்பரி, அக். 30 ரொடீஷியாவின் ஆட்சித் தலைவராக மகாராணி இருப்பதற்குப் பதிலாக ஜனதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான மசோதாவொன்று ரொடீஷிய ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ரொடீஷியாவின் ஆட்சித் தலைவராக இப்பொழுது பிரிட்டிஷ் எலிஸபெத் மகாராணி இருந்துவருகிறுர். ஆனல் பிரிட்டிஷ் மகாராணியை ரொடீஷிய ஸ்மித் ஆட்சியினர் ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை.

ரொடீஷியாவில் பெரும்பான்மையினராகவிருக்கும் கறுப்புச் சுதேசிகளுக்கு ஆட்சியில் சந்தர்ப்பமே கிடைக்காதவகையில் சிறுபான்மையினரான வெள்ளையர்கள் ரொடீஷியாவில் ஆட்சி நடத்திவருகிறுர்கள். ரொடீஷியாவில் இப்போதுள்ள ஆட்சிமுறையை மாற்றியமைக்க ஏற்கனவே பொதுவாக்கெடுப்பு நடத்தி வெள்ளையர் ஆட்சிக்கு வழிசெய்யப்பட்டிருக்கின்றது.

இப்பொழுது புதிதாக ஜனதிபதியைத் தெரிவுசெய்வதற்கான மசோதாவை...

### கிணற்றுள் சிறுமி பலி

பூநகரி, வியா கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்த 6 வயதுச் சிறுமி கிணற்றுள் வீழ்ந்து மரணமானுர். பூநகரி - சித்தன் குறிச்சி என்னுமிடத்தில் இச் சம்பவம் நடைபெற்றது.

பூநகரி கமத்தொழிற்பகுதியில் கடமையாற்றும் செல்வரத்தினம் என்பவரது மகள் குஞ்சு என்பவரே இவ்விதம் மரணமானுர்.

குடியேற்றத்திட்டக்காணி

### பயன்படுத்தப்படாவிட்டால் சுவீகரிக்கப்படும்

புத்தூர், வியாழன் கரியாலைநாகபடுவான் குடியேற்றத்திட்டத்தில் வழங்கப்பட்ட காணிகள் பயன்படுத்தப்படாவிட்டால் சுவீகரிக்கப்படுமென எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குடியேற்றத் திட்டத்தில் வயல்காணிகளும் மேட்டுக்காணிகளும் உள்ளன

அடுத்தமாதம்18ந் திகதிக்குள் வயல்காணிகள் விதைக்கப்பட வேண்டுமென்றும், மேட்டுக்காணிகள் திருத்தப்பட்டு கொட்டில்போடப்பட்டிருக்கவேண்டுமென்றும் இல்லையேல் சுவீகரிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

### ஏரிநிறைந்ததும் பறவைகள் வருகின்றன

சென்னை, அக் 30 சென்னையிலிருந்து50மைல் தூரத்திலுள்ள வேடந்தாங்கல் ஏரிக்கு பறவைகள் ஏராளமாக வரத்தொடங்கியுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் வேடந்தாங்கல் ஏரிக்கு வெளிநாடுகளிலிருந்து ஏராளமானபறவைகள் வருவது வழக்கம். ஆனல் சென்ற ஆண்டு மழை வறட்சி காரணத்தால் பறவைகள் வரவில்லை. இவ்வடுடம் ஏரி நிரம்பி வழிகிறது. ஏராளமான பறவைகள் வந்து சேருகின்றன இவைகளை வேடிக்கை பார்க்க உல்லாசப்பிரயாணிகள் செல்கிறுர்கள்.

---

### அதிபராக நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி சுன்னுகம் இராமநாதன் இசைக் கல்லூரி அதிபராக சங்கீத கலாநிதி சித்தூர்சுப்பிரமணியம்பிள்ளை பதவியேற்றுள்ளார். முன்னுள் அதிபரான திரு கல்யாண கிருஷ்ணப கவதர் அமெரிக்கா சென்றுள்ளார். வீணை ஆசிரியர் ஒருவரையும் இக் கல்லூரிக்கு நியமிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றது.

---

### பனம் விதை நாட்டப்பட்டது

நயினதீவு, வியா. நயினதீவைச்சுற்றி கடற்கரையோரங்களில் பனம் விதைகள் நடப்பட்டுள்ளன. கடல் அரிப்பால் தீவு பாதிக்கப்படாது தடுக்கு முகமாகவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. நயினதீவு பொதுஸ்தாபனங்கள் பல சிரமதான மூலம் இப்பணியைச் செய்தன.


தீபாவளி பண்டிகையை

முன்னிட்டு

பிறிப்போயாவும், போயாவும்
காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
கடை திறந்திருக்கப்படும்.

டயரும்ஸ்

54, 60, மெயின்வீதி — யாழ்ப்பாணம்.



களைகள்
எல்லாவற்றையும்
ஒழித்து


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

பொருளாதார வளர்ச்சி பற்றி மக்களுக்கு அறிவுறுத்துவதற்கு காங்கிரஸ் கட்சி முயற்சி எடுக்கவில்லையென்றும் கட்சித் தலைவர்களும் இது விஷயத்தில் அக்கறை காட்டவில்லையென்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள உணர்ச்சியைக் காங்கிரஸ் கட்சிஒருங்கிணைக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பா பொங்களூரி

கின்றது. அதற்குள் தலைவர்களுக்கிடையில் சமரசம்ஏற்படுமா அல்லது காரியக் கமிட்டிக் கூட்டத்தில் பலத்த மோதல் ஏற்படுமா என்பது ஒன்றும் தெரியவில்லை. திருமதி காந்தியின் குழுவினர் எதற்கும் தயாராய் இருப்பதாக்வும் எந்த நிலைமையையும் எதிர்கொள்ள அவர்கள் துணிந்து நிற்பதாகவும் கூறப்படுகின்றது.

காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளில் தலையிட்டு எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கான் சமரசம் செய்து வைப்பதானல்

லிபியாவில்

## பிரிட்டனுக்கு மூட்டை கட்ட உத்தரவு

திரிபோலி, அக். 30

லிபிரியாவிலுள்ள ராணுவத் தளங்களையெல்லாம் விரைவில்மூடிவிட்டுவெளியேறும்படி பிரிட்டனை புதிய லிபியா அரசாங்கம் கேட்டிருக்கின்றது. அமெரிக்காவுக்கும் இதே போன்ற அறிவித்தல் ஒன்றை லிபியா விடுத்திருக்கின்றது.

யும் பெறவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பட்டின சபைத்தலைவர் திரு. பொ நாகலிங்கம் பிரேரணையை சமர்ப்பிக்க திரு. இ. இராசதுரை (உப தலைவர்) ஆமோதித்தார்.

## கோரிக்கை

சுழிபுரம், வியா.

தொல்புரம் அரசினர் வைத்தியசாலைக்கு மேலும் ஒரு சிறுசேவையாளரை நியமிக்குமாறு கோரும் மகஜர் தொல்புரம், சுழிபுரம், பகுதியிலுள்ள பொது இயக்கங்கள் மூலம் கூட்டாகவும் தனித்தனியாகவும் சுகாதாரப் பகுதியினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தினமும் நூறு நோயாளருக்கு மேல் மருந்துபெற்று வருவதால் எல்லா வேலைகளையும் கவனிக்க ஒருவரால் முடியாமல் இருக்கின்றது. நோயாளர்களின் நன்மையைக் கருதி சகலரும் செளகரியமாக மருந்துபெற்றுக் கொள்ள வாய்ப்புஏற்படும் என இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரம் நாட்டுவிழா

சுழிபுரம், வியா.

வலிகாமம் மேற்குப் பிரிவுக் காரியாதிகாரி திரு. என், மாணிக்கநடராசா தலைமையில் நடைபெற்ற ஒரு விசேஷ கூட்டத்தில் சுழிபுரம் கிராம சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மூளாய், பொன்னாலை, திருவடிநிலை, தொல்புரம், வழக்கம்பரை ஆகிய பொது இடங்களில் மரம்நாட்டுவதெனவும் மரம்நாட்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி இதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளார்.

## தமிழ் சங்க சேவை

வெள்ளவத்தை. வியா.

"இந்த நாட்டின் சகல தமிழர்களுக்கும் பொதுவாக நன்மை செய்ய வேண்டும் என்றபெருநோக்குடனேயே கொழும்பு தமிழ்ச் சங்கம் இயங்கிவருகிறது வெள்ளவத்தையில் இதற்கெனச் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமதியான காணி இருக்கின்றது இச்சங்கத்தின் நூல்நிலையம் மேலும் விருத்திசெய்யப்படவேண்டும். இச்சங்கத்திற்குத் தமிழர்கள் அனைவரும் ஆதரவளிக்கவேண்டும். இத்தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சி தமிழ் மக்கள் அனைவரினதும் வளர்ச்சி."

இவ்வாறு கொழும்பு தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் பேசிய திரு. மு. வைரவப்பிள்ளை தெரிவித்தார்.

யாவில் இப்போதுள்ள ஆட்சிமுறையை மாற்றியமைக்க ஏற்கனவே பொது வாக்கெடுப்பு நடத்தி வெள்ளையர் ஆட்சிக்கு வழிசெய்யப்பட்டிருக்கின்றது.

இப்பொழுது புதிதாக ஜனதிபதியைத் தெரிவுசெய்வதற்கான மசோதாவை ரொடீஷிய அரசு நிறைவேற்றியுள்ளது. ஜனதிபதி தேர்தலுக்கான திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை. அநேகமாக அடுத்த மாதம் இது இடம்பெறும் என்று தெரிகின்றது.

## 3 லட்சம் பேர் தோற்றுவர்

கோட்டை, வியாழன்

இவ்வருடம் நடைபெறவிருக்கும் ஜீ. சி. ஈ. சாதாரண பரீட்சைக்கு 3 லட்சம் மாணவர்கள் தோற்றவுள்ளனர். சென்ற வருடம் 283,000 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றினர். டிசம்பரில் நடைபெறும் இப்பரீட்சை டிசம்பர் 14-ந் தேதி தொடக்கம் 31-ம் திகதிவரை நடைபெறுமெனத்தெரிகிறது.

## பெயர்ப் பலகை களவாடப்பட்டது

அல்லைப்பிட்டி, புதன்

வேலணை மேற்கில் சிறுபான்மைத் தமிழர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள ஒரு சன சமூக நிலையத்தின் பெயர்ப்பலகையை சில விஷமிகள் இரவோடிரவாக பெயர்த்துச் சென்றுவிட்டதாக புகார் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக மேற்படி நிலையத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## 1000 மாணவர் தெரிவு செய்யப்படுவா

கோட்டை, வியா.

கனிஷ்ட பல்கலைக் கழகங்களுக்கு 1000 மாணவர்களை எடுக்க கல்வியமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நவம்பர் 15-ம் திகதி தொடக்கம் இப் பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பிக்கும் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் 3 அல்லது 4 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களெனத் தெரிகிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'மற்றவர்களைப்பற்றி தீர்ப்புக் கூறவேண்டாம். உங்களைப்பற்றியே தீர்ப்புக் கூறிக் கொள்ளுங்கள். உண்மையில் மகிழ்ச்சியடையலாம்.'

— மாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருடம் ஐப்பசி மாதம் 15-ந் திகதி (31-10-69)


## நமது எழுத்தாளர்கள்

சமீப காலமாக நம் எழுத்தாளர்களின் பெயர்களும் அவர்களின் சாதனைகளும் பத்திரிகைகளில் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுக்களும் புத்தக வெளியீடுகளும் முடியும் ஆண்டில் போற்றத்தகும் அளவுக்கு இடம் பெற்றுள்ளன.

பத்திரிகைகளும் தனிப்பட்ட ஸ்தாபனங்களும் நடத்திய இலக்கியப் போட்டிகளில் மட்டுமின்றி அரசாங்கத்தின் ஆதரவில் இயங்கும் சாகித்திய மண்டலத்தினர் நடத்திய இலக்கியப் போட்டிகளிலும் தமிழ் எழுத்தாளர்கள் உற்சாகமாகக் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களின் உற்சாகம் மேலும் வளரும் அளவுக்கு இந்தப் போட்டி முடிவுகளினால் ஊக்கம் கிடைத்திருக்கின்றதா என்பது கேள்விக்குரிய விஷயமே.

போட்டிகளில் வெற்றி பெறுவதின் மூலம் ஒருவரின் இலக்கியத் திறனை எடைபோட்டுவிட முடியும் என்று கருதுவது பொருத்தமானதன்று. போட்டிகள் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்துவனவாக அமையலாமே யன்றி அதேஇலக்கியக் கர்த்தாக்களின் ஆக்கத்திறமையை அளவிடுவதாகக் கொள்ள இயலாது.

போட்டிகள் எதிலுமே கலந்து கொள்ளாத பல எழுத்தாளர்கள்உலகமேதைகளாகத் திகழ்வதுண்டு. போட்டிக்கு என்று தனது படைப்பைசிருட்டிக்கும் எழுத்தாளன் போட்டியாளர் ஏற்படுத்தும் சட்டதிட்டங்கள்,கட்டுப்பாடுகள் என்று பல்வேறு நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தனது இயல்பான சுதந்திரத்தையும் சுருக்கிக்கொள்ள வேண்டியிருக்கின்றது. என்றாலும் எழுத்துத்துறையில் பிரபல்யமானவர்களே இப்போட்டிகளில் மும்முரமாகக் கலந்து கொள்வதையும் பெரும்பாலும் அவர்களே வெற்றி பெறுவதையும் அவதானிக்க முடிகின்றது. இவர்களில் போட்டிகளுக்கென்றே களும் கருத்து வேறுபாடுகளும் இவர்களைப் பிரித்து வைப்பவைகளாய் இருக்கின்றன.

வளமிக்க எதிர்காலமொன்றை எதிர்பார்க்கும் இலக்கியப் பிரியர்களுக்குஇது ஏமாற்றமளிக்கும் நிலைமையே இந்த நிலைமையை மாற்றி அமைக்கவேண்டியதுமுற்றிலும் அவசியம் இதனை யார் செய்வது என்பதும் ஒரு கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

வெளி நாடுகளிலிருந்து இங்கு வந்து குவியும் தரமற்ற ஏடுகள் நம்நாட்டு இலக்கிய மற்றும் பத்திரிகைத் துறைகளைப் பெரிதும் பாதித்து வருவது உண்மையே. ஆனால் அம்மாதிரி தரக்குறைவான ஏடுகளையும், சஞ்சிகைகளையும் விரும்பிப் படிக்கும் வாசகர்களை திருத்த யாரால் முடியும்.

எது எவ்வாறுயினும் இன்றுள்ள நிலைமையில் நமது எழுத்தாளர்கள் மத்தியில் ஒருவிதவிரக்தி மனப்பான்மை உருவாகி வருவது கண்கூடு இதற்கு சரியான காரணத்தை அறிந்து அதற்கு ஆக்கபூர்வமான தீர்வு காணவேண்டியது இலக்கிய அன்பர்களின் கடமை.

முக்கியமாக இரவும் பகலும் உழைத்து உதிரத்தைச் சிந்தனையாகக்கொட்டி கருவூலங்களைப்படைத்து வைத்துக்கொண்டு வெளியிடமுடியாமலும், வேதனம் கிடைக்காமலும் தவிக்கும் பலர் நம்மிடையே இருக்கிறார்கள் இவர்களுக்கு ஆக்கமான உதவிகளை வசதியுள்ள பெருமக்கள்செய்ய முன்வரவேண்டும் தரமனபடைப்புகள்மலிவான விலையில் பொதுமக்களுக்குக் கிடைக்க வழிபிறக்கவேண்டும். இந்தவகையில் பிரசுரகர்த்தர்களும் சாகித்தியமண்டலம்போன்ற இயக்கங்களும் இன்னும் அதிகமாகவே உதவிபுரியலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக நம்எழுத்தாளர்களின்படைப்புகளுக்குப் போதியவிளம்பரம்கிடைக்காமல் போவதுகவலைக்குரிய விஷயம். பிரசுரிக்கப்படும்தரமான நூல்களுக்கு மலிவான விளம்பரம்

பண்டாரவன்னியன் நினைவு விழா சிறப்பு இதழ்

# தேசியவரலாற்றில் வன்னிவீரனுக்கு உரியஇடம் அளிக்கப்பட வேண்டும்

ஈழநாட்டில் இன்று வன்னியென்று வழங்கப்படும் பகுதி சிங்களப் பிரதேசமாகவும் தமிழ்ப் பிரதேசமாகவும் விளங்குவதை நாம் காணலாம். இப்பகுதியில்தான் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலந்தொட்டு மக்கள் குடியேற்றங்கள் இடம் பெற்றன. மன்னாரிலுள்ள மாந்தை முதல் முல்லைத்தீவு வரை தமிழ் மக்களின் குடியேற்றங்கள் கி. மு. 2ம் நூற்றாண்டுவரை தழைத்தோங்கியது. இத்தகைய வளமும், வாழ்வும் மலிந்த வன்னிப் பகுதி, 350 ஆண்டுகளாக இலங்கையை நாடி, வர்த்தகம் வளர்த்துக் கரையோர மாகாணங்களை அடிமைகொண்ட போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரஞ்சுக்காரர் என்ற அந்நியர்களால் அடிமைகொள்ளப்படாத, முயன்றும் அடிமைகொள்ளப்படமுடியாத பகுதியாகத் திகழ்ந்தது. எனவேதான் வன்னிப் பகுதியை அடங்காப்பற்று என்றழைத்தனர். இலங்கையின் கரையோர மாகாணங்களை 1505ன் பின்னர் அடிமைகொண்ட போர்த்துக்கீசருக்கும், அதேபகுதியை 1658 முதல் 1796வரை ஆண்ட ஒல்லாந்தருக்கும் பணிய மறுத்த சுதந்திரப் பிரியர்களான மக்கள், வளமார் வன்னியில் வீரம் பரப்பி வந்தனர்.

யாழ்ப்பாணத்திலும் திருக்கோணமலையிலும் மன்னாரிலும் ஒல்லாந்தர் கோட்டைகளை அமைத்து, தமது ஆதிக்கத்தை அடங்காப்பற்றும் பழம்பதியிலும் செலுத்த ஆரம்பித்தனர். இதற்கு இடம் தராது ஆங்கில ஆதிக்கத்திற்கு இடையறாத தொல்லை தந்து அரணமைத்துப் போரிடத் துணிந்து விளங்கிய அடங்காப்பற்றின் புகழ்பூத்த சிற்றரசனாகத் திகழ்ந்தான் பண்டாரவன்னியன் என்ற வீரத்தால் உயர்ந்த மன்னன்.

18ம் நூற்றாண்டின் முடிவிலும் 19ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தான் ஆங்கில எதிர்ப்பியக்கத்திற்குத் தமிழ்ப்பகுதியில் எதிர்ப்புக் கொடியுயர்த்திய பண்டாரவன்னியன் வீர வாழ்வு வாழ்ந்தான். 1796-1803ம் ஆண்டுவரை ஆங்கிலேயர் தமது ஆதிக்கத்தை இலங்கை முழுவதும் நிலைநாட்

'யானை கட்டிய புளியும்', 'பண்டாரவன்னியன் கிணறும்', 'பண்டாரவன்னியன் வளவும்' காணப்படுகின்றன குமிழமுனை பல வழிகளிலும் படைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் அதே வேளையில் முல்லைத்தீவை முற்றுகையிட்டுத் தாக்கவும் தக்க அணித்தான கிராமமாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

டாரவன்னியன் தாக்கப்பட்டு ஆங்கிலப்படைகளால் தோற்கடிக்கப்பட்ட இடத்தில் தான் இப்பிரசித்தி பெற்ற 'கற்சிலை' அமைந்துள்ளது. '1803-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் திகதியில் இதையடுத்த பகுதியில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான்'' என்று ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டுள்ளது இக் கற்சிலை ஒட்டுசுட்

— வ. பொன்னம்பலம் எம். ஏ. —

ஒல்லாந்தரும், பின் ஆங்கிலேயரும் ஆனையிறவுப் பகுதியிலும், பின் திருக்கோணமலையிலும், மன்னாரையடுத்த பகுதியிலும் படையரணமைத்து இடையறாத தொல்லை தந்த ''கொள்ளைக்கார பண்டாரவன்னியன்'' என்று ஆங்கிலேய நிர்வாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அவன் ஒரு மன்னன்தான். அதுவும் மானிய முறையின் சின்னமாகவும், கண்டி அரசின் நண்பனாகவும் அவன் திகழ்ந்தான். அநுராதபுரப் பகுதியை அடுத்து நுவரகாலவீவாப் பகுதியில் பிரபு, கண்டியரசனின் பிரதிநிதியாவான். அவனுக்கும் பண்டாரவன்னியனுக்கும் தொடர்பு இருந்தமைக்குச் சான்றாகக் கற்சிலைமடுவில் பண்டாரவன்னியன் தோல்வியின் பின் 1803ம் ஆண்டு ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட பீரங்கிகளும், துப்பாக்கிகளும் கண்டியரசின் முத்திரை பொறிக்கப்பட்டனவாக அமைந்திருப்பது சான்றாகும் 'கற்பூரப்புல்'' என்னும் பெயர்தாங்கிய பகுதிகள் தண்ணீரூற்று குமிழமுனை வீதியிலும் தண்ணீரூற்று நெடுங்கேணி வீதியிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது' கற்பூரப்புல்வெயில் பண்டார வன்னியன் ஆங்கிலப்படைகளுடன் மோதினான் என்று கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. இறுதியில் பண்

டானையடுத்த ஒரு சிறு கிராமத்தின் நடுவில் உள்ளது. அக்கிராமத்தின் பெயரே ''கற்சிலைமடு'' என்று அமையும் அளவிற்கு இது ஆரம்பகாலம் முதல் முக்கியத்துவம் பெற்றிருக்கவேண்டும். இங்கு போரில் தோற்ற பண்டாரவன்னியன் மேற்கு நோக்கிச் சென்று பனங்காமத்திலுள்ள உடையாவூரில் வாழ்ந்து சில ஆண்டுகளின் பின்பும் ஆங்கில எதிர்ப்புக் கலகங்களுக்குத் தலைமை தாங்கித் தோல்விகண்டான். தனது இறுதி மூச்சுவரை தாயகத்தின் விடுதலைக்குமுடிவுகட்ட முனைந்த அன்னியரை எதிர்த்துப் பேராடிய மாவீரனாகப் பண்டாரவன்னியன் திகழ்ந்தான். பண்டாரவன்னியனை ஆங்கில நிர்வாகம் ''கொள்ளைக்காரன்'' என்று வர்ணித்ததில் ஆச்சரியமில்லை. இந்திய விடுதலை இயக்கத்தையும் இதுபோன்ற தேசியப் போராட்டங்களையும் வழிநடத்திய தலைவர்களுக்கு அன்ன்ய ஆளும் வர்க்கம் கொடுத்த பெயர் 'கொள்ளைக்காரர்' என்பதே.

மேலும் ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கத்தில் சிங்கள மக்களும் தமிழ மக்களும் சேர்ந்து பல கட்டங்களில் போராடி வந்தனர் என்பதற்குக் கண்டியரசனுக்கும் பண்டாரவன்னியனுக்கும் இடையில் நிலவிய படை

யுறவும் ஒத்தகாலத்தில் ஆங்கில எதிர்ப்புத் தொடங்கியமையும் சான்றாகும்.

இத்தகைய பெருவீரனை நினைவுறுத்துவது ஏகாதிபத்திய வாதிகள் நிறுவிய கற்றூண் ஒன்றுதான். மேலும் கற்சிலைமடுவில் வாழும் நன்றியறிதல் மிக்க மக்கள்-'பண்டாரவன்னியன் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்' என்னும் பெயரில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை நிறுவியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒட்டுசுட்டான் கற்சிலைமடு, முல்லைத்தீவுச் சந்தியில் அரசினரும் பொதுமக்களும் சேர்ந்து பண்டாரவன்னியனின் உருவச்சிலை அமைப்பது அவசியம் மேலும் ஒரு தேசிய வீரன் அந்தஸ்தைப் பெறத்தகுந்த வீரபண்டாரவன்னியனின் பெயரை நினைவுறுத்தும் வகையில் முத்திரையன் கட்டுத்திட்டத்தில் அமையவிருக்கும் புதிய நகரத்திற்கு பண்டாரவன்னியன் நாமம் மிகவும் பொருத்தமானது. இந்நாட்டுமக்கள் அனைவரும் பொதுவாகவும் தமிழ்பேசும் மக்கள் குறிப்பாகவும் பண்டாரவன்னியன் வீரம் செறிந்த வாழ்விற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நினைவுநாளை அவன் போரில் தோற்றதாகக் கல் குறிப்பிடும்அக்டோபர்31ம்நாளில் ஆண்டுதோறும் விழாவாக எடுப்பது அவசியமே. இக்கால வரலாற்றுப் பின்னணியும் அதில் இடம் பெற்று ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் பண்டாரவன்னியன் பங்கினையும் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை அறிஞர்கள் எதிர்காலத்தில் ஆராய்ந்து தேசிய வரலாற்றில் வன்னி வீரன் பண்டாரவன்னியனுக்கு உரிய இடத்தைப் பெற்றுத்தர முன்வருவது தலையாய கடனாகும்

## பண்டாரவன்னியன் வரலாறு கூறும் பாடல்கள் அச்சாக வேண்டும்

வன்னிநாட்டின் வரலாற்றை அறியவும் பண்டார வன்னியனைப் பற்றி அறியவும் வரலாற்று ஆதாரங்

வனமும் வனஞ்சார்ந்த நிலமுமாகிய முல்லைநிலமும், வயலும் வயல் வயல் சார்ந்த நிலமுமாகிய மருத நிலமுமுண்டு. காடுபடு ரவியங்க

கறுப்பன் வெள்ளையனை
வெல்லல்-எந்தக்
காலத்திலுமுண்டோ
கப்ரின்மார் கேளீர்
சிறுத்தைகள் சிங்கத்தை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளில் அரசியல்பற்றி ஆராய்வதில் தவறில்லையாம்

### மாணவர் பற்றி அதிபர் கூறுகிறார்

மண்டைதீவு, வியாழன் ''மாணவர்களின் மனம் கல்வி கற்பதில் மட்டும் இருந்தால் போதாது. சமூகத்தின் குறைகளையும், தேவைகளையும் ஆராய்ந்து அவற்றில் ஆவன செய்வதிலும் சிறிது கவனம் செலுத்தவேண்டும்' என மண்டைதீவு மகாவித்தியாலய மாணவர் சங்கக் கூட்டத்தில் உரையாற்றிய அதிபர் திரு. நதானியல் குறிப்பிட்டார். அவர்தொடர்ந்து பேசுகையில் மாணவர்கள் நாட்டின் முதுகெழும்பு போன்றவர்கள். வருங்கால சந்ததியினரின் ஆசான்களும் அவர்களேயாவர். அவர்கள் தங்களை எந்நிலை நின்று வழிப்படுத்திக்கொள்கிறார்களோ அதைப் பொறுத்ததே பின் சந்ததியினரின் வாழ்க்கை அமைப்பு ஆகும் என்று கூறினார்

''மாணவர்கள் இன்று அரசியலில் ஈடுபடுவதால் தம் ஒளிமயமான எதிர்காலத்தை தாமே நிர் மூலம் செய்யக்கூடியவர்களாகின்றனர் பாடசாலையில் அரசியலைப் பற்றி ஆராய்வதில் தவறில்லை ஆனால் அதில் ஈடுபடுதல்தான் மாபெரும் தவறு அரசியலில் ஈடுபடுவதற்கு காலமும், உரிமையும் இருந்தபோதிலும் எதையும் உரிய காலத்தில் அறுவடை செய்தலே நயத்தக்கது என்றும் கூறினார்

பூநகரியில் நடந்தது:

## மின்னல் தாக்கி ஒருவர் பலி; இருவர் ஆஸ்பத்திரியில்

பூநகரி, வியாழன் மின்னலினால் தாக்குண்ட மூவரில் ஒருவர் துடிதுடித்து மரணமானார். இச்சம்பவம் பூநகரிப் பகுதியைச் சேர்ந்த செம்மன்குண்டு என்னுமிடத்தில் நடைபெற்றது

சிறு நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த இவர்கள் மூவரும்வேலைசெய்துகொண்டிருந்தபோது மின்னல் தாக்குதலுக்கு இலக்கானதாக விசாரணையில் கூறப்பட்டது. மரணமான அராலியைச் சேர்ந்த நா. ஒப்பிலாமணியின் திடீர்மரணம் பற்றி பூநகரி திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. ரி. பரமசாமி விசாரணை நடாத்தினார். பிரேத பரிசோதனையும் நடைபெற்றது. அதிர்ச்சியினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மின்னலினால் தாக்குண்ட மற்றும் இருவரும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## "தெய்வீகத் தன்மையாலேயே பலமொழிகளில் அச்சிடப்பட்டது"

### பைபிள் நூல் பற்றி மாந்தைக் காரியாதிகாரி

முசலி, வியாழன் உலகத்தில் தோன்றிய நூல்களில் அதிக மொழி பெயர்ப்பானநூல் பைபிளேயாகும். இது ஏறக்குறைய நாநூற்றுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது இந் நூல் இப்படி அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதற்கு காரணம், அதனுள் காணப்படும், தெய்வீகத்தன்மையேயாகும், இனத்தால் நாம் தமிழராக இருந்தாலும், இந்நூலின் உள்ள தெய்வீகத்தன்மையை நாம் கட்டாயம் படித்தறிய வேண்டும்''.

மாந்தைவடக்கு கிராம சபை கலைவிழாமைதானத்தில் நடைபெற்ற திருமறை விழாவின் போது மாந்தைக் காரியாதிகாரி திரு. முத்தையா சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

அடம்பன் கட்டைக்குரவர்வணபிதா ஜெபநேசனால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இவ்விழாவை மாந்தைக்காரியாதிகாரி பிரிவுக்குட்பட்ட கத்தோலிக்கமக்களின்ஆதரவில்இவ்ழாவிநடைபெற்றது

முசலிக் காரியாதிகாரி திரு. வை. சொக்கலிங்கம், மன்னார் எம்.பி.திரு. வீ. ஏ. அழகக்கோன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இவ் விழாவில் கிறிஸ்தவ, முஸ்லிம், சமயத் தலைவர்களும் கலந்துகொண்டனர். நாடகம்,நடனம் போன்ற நிகழ்ச்சிகளும்இடம் பெற்றன.

## 'பொதுக்கொள்கை ஒன்றை

வேண்டியிருக்கின்றது. என்றாலும் எழுத்துத்துறையில் பிரபல்யமானவர்களே இப்போட்டிகளில் மும்முரமாகக் கலந்து கொள்வதையும் பெரும்பாலும் அவர்களே வெற்றி பெறுவதையும் அவதானிக்க முடிகின்றது. இவர்களில் போட்டிகளுக்கென்றே எழுதிப் பழகியவர்களும் உண்டு.

எது எவ்வாறுயினும் நம் நாட்டில் எழுத்துப் போட்டிகள் மூலம் பலர் நாடறிந்த எழுத்தாளர்களாகப் பரிணமிக்க முடிந்திருப்பதையும் இவ்வாறான போட்டிகளில் கலந்துகொள்ளாத பலர் திறனிருந்தும் இலைமறைகாய்களாய் ஒதுங்கியிருக்க நேர்ந்திருப்பதையும் காண்கிறோம். போட்டிகளில் கலந்து கொள்வதும் ஒதுங்கியிருப்பதும் அவரவர் மனோதர்மத்தைப் பொறுத்தது. ஆனால் தமிழ் எழுத்தாளர்மத்தியில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை விரும்புகிறவர்கள் இது குறித்து கவலை கொள்ளாமல் இருக்க இயலாது.

நம் நாட்டில் மற்றைய நாடுகளைப் போல் எழுத்தாளர்களுக்கு வசதிகளும் வாய்ப்புக்களும் இருக்கின்றனவா என்பது இன்னொரு முக்கிய விஷயம். பத்திரிகைகளால் ஓரளவுக்குத்தான் உதவுவதற்கு இயலும், ஒரு சில பத்திரிகைகளே எல்லாரையும் திருப்திப்படுத்துவதென்பதும் பிரச்னைக்குரியயதே. மேலும் இங்கு எழுத்தாளர்களுக்கு கொடுக்கப்படும் சன்மானங்களும் திருப்தியளிப்பதாய் இல்லை. இந்த நிலைமையில் எழுத்தாளர்கள் மத்தியிலும் பிரதேச ஒருங்கிணைப்புக்கு பதில் பிரதேசப் பிரிவு மனப்பான்மையே தலைதூக்கியிருப்பதாகப்பலர் சுட்டிக்காட்டுகிறார்கள். அதிலும் கட்சிப் பூசல்

இன்னும் அதிகமாகவே உதவிபுரியலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக நம்எழுத்தாளர்களின்படைப்புகளுக்குப் போதியவிளம்பரம்கிடைக்காமல் போவதுகவலைக்குரிய விஷயம். பிரசுரிக்கப்படும்தரமான நூல்களுக்கு மலிவான விளம்பரம் தொடர்பாகக்கிடைப்பதாயின் பலர் பயனடைய முடியும். அதேசமயம் உள்ளூராட்சி மன்றங்கள், சனசமூகநிலையங்கள், படிப்பகங்கள், பள்ளிக்கூடங்கள் போன்ற பொது நிறுவனங்கள் உள்ளூர் எழுத்தாளர் படைப்புக்களுக்கு இன்னும் கூடுதலாகவே ஆதரவு அளிக்க முன்வரவேண்டும்.

அகில இலங்கை

## தமிழ் மாணவா சங்கம் உதயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகிலஇலங்கைத் தமிழ் மாணவர் சங்கம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதன் தலைவராக திரு சி இலட்சுமிகாந்தனும், உபதலைவராக ஜோ. பிரகரத்தினமும், செயலாளராக எஸ். சண்முகதாசனும் உபசெயலாளராக மு. நல்லதம்பியும், பொருளாளராக பி. கனகரத்தினமும் தெரியப்பட்டார்கள். எட்டுப் பேர்கொண்ட நிர்வாகக் குழுவொன்றும் தெரியப்பட்டது.

தமிழர் மத்தியில் நிலவும் தீண்டாமையை ஒழிக்க மாணவர்கள் அனைவரும் ஒன்றுபட்டுவரல்வேண்டும் என்று இக் கூட்டத்தில் அழைப்பு விடுக்கப்பட்டதோடு அரசியலால் மாணவர்கள் பாதிக்கப்படுவதற்குக் கண்டனமும் தெரிவிக்கப்பட்டது. (கா. நி)

## புதிய மண்டபம் அமைக்கப்படும்

ஒட்டுசுட்டான், வியா

ஒட்டுசுட்டான் கிராம முன்னேற்றச்சங்கத்தினரால் கிராம முன்னேற்றச் சங்கமும், வாசிகசாலையும் ஒருங்கே கொண்ட ஒரு மண்டபம் ரூ. 4,000 செலவில் அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான ஆரம்ப வேலைகளை சிரமதான முறையில் மேற்கொள்ளப்பட்டு விஜயதசமி அன்று அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது.

## புதிய நிர்வாகிகள்

கோப்பாய், வியாழன்

இருபாலை பயிர்ச்செய்கைக் குழுவின் புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திரு. இ. பரமானந்தராசா ஜே.பி. காரியதரிசி: திரு. எஸ். தியாகராசா தனாதிகாரி: திரு. என். வேலுப்பிள்ளை.

பன்னிருவர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தொடக்கத்திலும் தான் ஆங்கில எதிர்ப்பியக்கத்திற்குத் தமிழ்ப்பகுதியில் எதிர்ப்புக் கொடியுயர்த்திய பண்டாரவன்னியன் வீர வாழ்வு வாழ்ந்தான். 1796-1803ம் ஆண்டுவரை ஆங்கிலேயர் தமது ஆதிக்கத்தை இலங்கை முழுவதும் நிலைநாட் முயன்ற காலமது. முல்லைத்தீவில் கோட்டை அமைத்து மக்களை மண்டியிடவைக்க விரும்பிய பிரித்தானியக் கொம்பனியாருக்கும், துரைத்தனத்திற்கும் தடையாக இருந்தவன் பண்டாரவன்னியனுவான். கண்டி அரசனையும் அரசனுக்குச் சார்பாகப் போர்க்கொடி உயர்த்திய அனைவரையும் ஒழித்துக்கட்ட ஆங்கில ஏகாதிபத்தியம் திட்டமிட்டது எதிர்த்து நின்ற பண்டாரவன்னியன், பழம்பதியாம் ஒட்டுசுட்டானை அடுத்துள்ள பண்டாரக்குளத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்திருக்கலாம் என்று நம்பபப்படுகின்றது. இவருடன் தொடர்பு கொண்ட இடமாகக் குமிழமுனை திகழ்கிறது. முல்லைத்தீவில் அமைந்த ஆங்கிலக் கோட்டைக்கு எதிராகப் படைதிரட்டிய பண்டாரவன்னியன் படை முகாமாகக் குமிழமுனை விளங்கியிருத்தல்வேண்டும். இங்கு

உலகமகாயுத்தம்;

## மௌனம் அனுஷ்டிப்பு

கொழும்பு, வியாழன்

1914-1918ம் ஆண்டுகளில் நடைபெற்ற முதலாவது மகாயுத்தத்தினதும் 1939-1945ம் ஆண்டு இரண்டாம் மகாயுத்தத்தினதும் ஞாபகார்த்தமாக எதிர்வரும் நவம்பர் 8ந் திகதி சனிக்கிழமை அன்று இரு நிமிட நேரம் மௌனம் அனுட்டிக்கும் படி உள்நாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

முந்நாள் ராணுவசேவையாளர் சங்கம் யுத்த ஞாபகார்த்தமாக விகாரமகாதேவி பூங்காவில் ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தையும் ஒழுங்கு செய்துள்ளது. இரண்டு நிமிட மௌனத்திற்கு மரியாதை அளிக்குமுகமாக இலங்கை பூராகவும் தெருக்களில் சென்று கொண்டிருக்கும் போக்குவரத்து வாகனங்கள், பொலிஸ் துவக்குச் சூட்டினைத் தொடர்ந்து சரியாகக் காலை 10.55க்கு நிறுத்தி வைக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

# பண்டாரவன்னியன் வரலாறு கூறும் பாடல்கள் அச்சாக வேண்டும்

வன்னிநாட்டின் வரலாற்றை அறியவும் பண்டாரவன்னியனைப் பற்றி அறியவும் வரலாற்று ஆதாரங்கள் மிகச் சிலவே உண்டு. கற்சிலை மடுவிலேயிருக்கும் கல்வெட்டும், இலங்கைச் சிவில் சேவையைச் சேர்ந்த ஜே. பி. லூயிஸ் எழுதிய MANUAL OF VANNI DISTRICT என்ற நூலும், பண்டிதரத்ன சி. எஸ் நவரத்தினம் எழுதிய VANNI AND THE VANNIYAS என்ற நூலும் பண்டாரவன்னியன் வரலாறு பற்றிய சில தகவல்களைத் தருகின்றன. இவற்றைத் தவிர சில கர்ண பரம்பரைக் கதைகளும் பாடல்களும் மக்கள் மத்தியிலே நிலவுகின்றன. எமக்குக் கிடைத்துள்ள ஒருசில பாடல்கள் பண்டாரவன்னியன் வரலாற்றை அறிமுகப்படுத்த உதவுவதாகும்.

வடக்கே யாழ்ப்பாணப் பரவைக் கடலையும், கிழக்கே திருக்கோணமலை மாவட்டத்தையும், தெற்கே அருவியாற்றையும், மேற்கே மன்னார் மாவட்டத்தையும் எல்லையாகவுடையது வன்னி நாடு.

எல்லைவடக்கில் எழில்யாழ்
பரவுகடல்
பல்லோர் புகழுவி
தெற்கெல்லை-நல்லதிரு
கோணமலை கீழ்பால்
கேதீச்சரம் மேற்கில்
மாணத் திகழ்வன்னிநாடு.

என்னும் பாடல் வன்னிநாட்டின் எல்லைகளைக் கூறுகின்றது. இதனைப் பாடிய புலவர் பெயர் தெரியவில்லை. இதைப் போலவே பெயரறியாப் புலவர்கள் பாடிய பாடல்கள் சிலவற்றைக் காண்போம்.

வியாபாரஞ் செய்யவந்த வெள்ளையர்கள் கோட்டை இராச்சியத்தையும் யாழ்ப்பாண இராச்சியத்தையும் பிடித்து ஆண்டார்கள்.

கொழும்போடு கோட்டை
யும் மட்டக்களப்பும்
குறைவில்லா யாழ்ப்பாண
ராச்சியமும்
அழுங்குப்பிடியாகப் பிடி
த்தவற்றை
ஆண்டாரே யாங்கில
நாட்டினர்கள்.

இவர்களுக்கு வன்னி நாட்டையும் பிடிக்க வேண்டுமென்ற ஆசையேற்பட்டது. தமிழ் மரபுப்படி முல்லை, மருதம், நெய்தல, குறிஞ்சி என்ற நான்கு வித நிலப் பிரிவில் வன்னிநாட்டில் கடலும் கடல் சார்ந்த நிலமுமாகிய நெய்தல் நிலமும் வனமும் வனஞ்சார்ந்த நிலமுமாகிய முல்லைநிலமும், வயலும் வயல் சார்ந்த நிலமுமாகிய மருதநிலமுமுண்டு. காடுபடு ரவியங்களாகிய தேக்கு, கருங்காலி, சாயவேர், யானைத்தந்தம் என்பவற்றையும், கடல்படு திரவியங்களான மீனும் முத்தும், வயலிலே விளையும் செந்நெல்லும் கருநெல்லும் நிறைந்த பூமியாகத் திகழ்ந்தது வன்னிநாடு.

முல்லை மருதமொடு நெய்
தல்நிலம் குறிஞ்சிநிலம்
எல்லாமே வன்னிப்பதி
தன்னகத்தில் உண்டதனல்
பொல்லாத வெள்ளையர்
கள் பிடித்திதனைச் சேர்த்
திட்டால்
நல்லவியாபாரம் நடத்த
வழியுண்டென்றார்.

வன்னி நாட்டில் தமது மேலாணையயேற்றுத் திறைதருமாறு கேட்டுப் பண்டாரவன்னியனிடம் தூதுவனை அனுப்பினர் ஆங்கிலேயர். சொந்த நாட்டு மன்னனை வந்தவர்கள் திறை கேட்டதும் சீறியெழுந்தான் பண்டாரவன்னியன்:

கறுவா வாங்க வந்தார்-
இன்று
கப்பமென்று கேட்டால்
உறுவார் துன்பம் ஈதை-
துரை
உணர வேண்டும் இன்றே
எனக் கூறியனுப்பினான் பண்டாரவன்னியன். ஆங்கிலேயர் தமது மேலாணையை வன்னிநாட்டில் நிலைநாட்டுவதற்கு முதற் படியாக முல்லைத்தீவிலே ஒரு கோட்டையைக் கட்டிப் பீரங்கிகளையும், துப்பாக்கிகளையும், படைவீரர்களையும் நிறைத்து வைத்தனர். இதையறிந்த பண்டாரவன்னியன் தனது நம்பிமாருடனே முல்லைத்தீவை நோக்கிப் படையெடுத்தான் குமுழமுனையிலே முகாமிட்டு முல்லைத்தீவுக் கோட்டையைப் பண்டாரவன்னியனின் படை தாக்கியது. அங்கு கப்டன் ட்றிபேக்கின் தலைமையிலிருந்த பிரித்தானிய படை தோற்றோடியது. தப்பிப் பிழைத்துச் சென்ற கப்டன் ட்றிபேக் சேனாதிபதி யுவெலிடம் முறையிட்டான். கறுத்த மன்னன் வெள்ளையரை வென்றமை அவமானத்திற்குரியது எனக் கூறினார் யுவெல்துரை.

கறுப்பன் வெள்ளையனை
வெல்லல்-எந்தக்
காலத்திலுமுண்டோ
கப்ரின்மார் கேளீர்
சிறுத்தைகள் சிங்கத்தை
வெல்லல்-எந்தச்
சீமையிலுண்டிது செப்பிடு
வீரே

இதைக் கேட்ட கப்டன் ட்றிபேக் கூறுகின்றார்.

ஒருபடை கொண்டு
வெல்லல்-என்ப
தொருகாலும் முடியாது
முடியாது துரையே
பெரியவாம் மூன்று
படைகள் வேண்டும்
பண்டார வன்னியன்
படுதோல்வி எய்து

இதேகருத்துடைய இன்னுமொருபாடல் உண்டு.

பண்டாரவன்னியனைத்
தோல்வியுறச் செய்யப்
பாரில் ஒரு சேனை
போதாது துரையே
கண்டார் கலங்கிடும்மக்
காவலனை வெல்ல
கடிதினிலே மூன்றுபடை
கொண்டுசெல்லவேண்டும்

இதனைக்கேட்ட சேனாதிபதி ஆலோசனைச் சபையை அழைத்தார். எப்படியும் வன்னிமண்ணை அடிமை கொள்ள வேண்டுமென்ற ஆசை அவருக்கிருந்தது.

ஆலோசனைச் சபையை
இன்றே
அழையுங்கள் என்றுமே
ஆணையிட்டாரே
கோலோச்ச வேண்டுமே
வன்னி
கோதிலா ராச்சியம்
முழுவது மென்றே.

ஆலோசனைச் சபையிலே வன்னிநாட்டின் மூன்று எல்லைகளிலிருந்து மூன்று படைகள் அனுப்புவதாகத் தீர்மானிக்கப்பட்டது யாழ்ப்பாணத்திலிருந்து யுவெல் தலைமையில் ஒருபடை திருக்கோணமலையிலிருந்து எட்வேட் மெட்சின் தலைமையில் ஒருபடை, மன்னாரிலிருந்து கப்டன் ட்றிபேட்கின் தலைமையிலே ஒருபடை.

இத்தனையும் கொண்டு
செல்வீர்-கப்டின்மாரே
இனியந்த வன்னியன்
மீளவே வேண்டாம்
(இத்தனை)

..................................

கற்சிலைமடுவிலே கடும் போர் நடைபெற்றது. பண்டாரவன்னியன் எதிர்பாராத விதத்திலே அவனைத் தாக்கித் தோற்கடித்தன ஆங்கிலப் படைகள். தமது வீரத்தைப் பறைசாற்றக் கற்சிலையொன்று அமைத்து கல்வெட்டொன்றைப் பொறித்தனர். சிலையின் பெயராலே அக்கிராமம் கற்சிலைமடு என்னும் பெயர் பெற்றுள்ளது. ''இதையடுத்த பகுதியிலேதான் கப்டன் ட்றிபேக் 1803 அக்டோபர் 31-ல்பண்டாரவன்னியனைத் தோற்கடித்தான் என்னும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம்

எமக்குக்கிடைத்த ஒருசில பாடல்களை மேலேகுறிப்பிட்டோம் இதைப்போன்ற எத்தனையோ பாடல்கள் வன்னி நாட்டின் பலபகுதிகளில் மறைந்திருக்கலாம் இவற்றைக் கண்டுபிடித்து அச்சிட்டு வெளியிட்டால் அவை வன்னிநாட்டு வரலாற்றை ஆராய்பவர்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

- ''முல்லைமணி'' -

கட்டாயம் படித்தறிய வேண்டும்''.

மாந்தைவடக்கு கிராம சபை கலைவிழாமைதானத்தில் நடைபெற்ற திருமறை விழாவில் கிறிஸ்தவ, முஸ்லிம், சமயத் தலைவர்களும் கலந்துகொண்டனர். நாடகம், நடனம் போன்ற நிகழ்ச்சிகளும்இடம் பெற்றன.

# 'பொதுக்கொள்கை ஒன்றை ஆதரிப்போம் வாருங்கள்'

## வவனியா எம். பி.

பூநகரி, வியாழன்

''எமது ஒற்றை ஆட்சிக் கொள்கை ஒருபுறமிருக்கட்டும் அதேபோல் உங்கள் சமஷ்டிக் கொள்கையை ஒருபுறப் வைத்து விட்டு ஒரு பொதுக்கொள்கையை உருவாக்குவோம் வாருங்கள்'' என துணுக்காய் மல்லாவிச் சந்தியில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் பிரசாரக்கூட்டத்தில் வவனியா எம். பி. திரு, ரி சிவசிவதம்பரம் தமிழரசுக்கட்சிக்கு பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

காலஞ்சென்ற பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்கா ஆட்சிக்காலத்தில் மலையகத் தமிழருக்கு துரோகம் செய்ததாக எமது தலைவரைக் குற்றம் சாட்டிய தமிழரசுக் கட்சியினர் இன்று மூன்றே முக்கால் லட்சம் மலையகத் தமிழர்களை நாடு கடத்த மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதன் காரணம் என்ன என்று திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கேட்டார்.

## வெற்றிலை ஏற்றுமதி

கோட்டை, வியா.

இலங்கையிலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகாத 91 பொருட்களுக்கு வெளிநாடுகளில் மார்க்கட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளில் வெற்றிலை, விளக்குமாறு போன்றவையும் அடங்கும்.

## கொள்ளுப்பிட்டியில் கொள்ளை

கோட்டை, வியா.

கொள்ளுப் பிட்டியிலுள்ள பங்களா ஒன்றில், ரூ10,200 பெறுமதியான கைக்கடிகாரங்கள் நகைகள் ரொக்கப் பணம் ஆகியன கொள்ளை போயிருக்கின்றன இதுவரை எவரும் கைதாகவில்லை.

## ''பலநோக்குப் பாடசாலைகள் வேண்டும் சமத்துவத்திற்குவழி''

பருத்தித்துறை, வியாழன்

''சாதியடிப்படையில் தீண்டாமை என்னும் சாபக்கேடு நிலவும் பகுதிகளில் செய்தொழில் மூலம் பிரிவினை ஏற்படுத்தும் இன்றைய நிலையில் இங்கிலாந்தில் உள்ளதைப்போல பல்வே கலைகளையும், தொழில்களையும் பயிற்றும் பலநோக்குப் பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டியது அவசியம் ஒரே பாடசாலையில் பல தொழில்களும் திறமையடிப் படையில்பயிறுற்விகக்ப்படுவதன் மூலம் வளரும் சந்ததியினரிடையே சகோதரத்துவ சமத்துவ உணர்ச்சிகளை விதைக்கமுடியும்.''

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து பருத்தித்துறை புட்டளை மகாவித்தியாவயத்துக்கு மாற்றப்பட்ட ஆசிரியர் திரு. எஸ். இராஜசேகரம் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயப் பேரவை தயக்கு அளித்த பிரிவுபசார வைபவத்தின் போது குறிப்பிட்டார். திரு. வி. மகாலிங்கம் தலைமையில்நடைபெற்ற இவ்வைபவத்தில் மேற்படி கல்லூரி அதிபர் திரு. கே. சிவசிதம்பரம், திரு. வீ. வீரகத்தி ஆகியோரும் உரையாற்றினர்.

திரு. இராசசேகரத்திற்கு ஆசிரியப் பேரவையின் சார்பாகப் பரிசில்கள் வழங்கப்பட்டன. செயலாளர் திரு. வீ. சிதம்பரப்பிள்ளை நன்றி கூறினார்.

சுன்னாகம், புதன்

சுன்னாகம் சிவன்கோவிலில் அம்பாள் விக்கிரகத்திலிருந்த தங்கத்தாலி திருட்டுப் போய்விட்டதாகத் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org